கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

22-12-1974

50 காசு





தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...
அப்பா, இன்றுகூடக் கிட்டு என்னை அடித்துவிட்டான்.
நீயும் ஏன் திருப்பி அடிக்க வில்லை? நீ தற்காப்பு செய்து கொள்ளக் கற்க வேண்டும்.
அடியைத் தடுப்பதற்கு, பின்னும் அல்லது பக்கவாட்டில் நகர்ந்து கொள்ள வேண்டும். குனிந்து கொண்டாலும் அடியைத் தடுக்கலாம்
அல்லது அடியை மணிக்கட்டால் தடுக்கலாம்.
முன்கையால் அல்லது தோளால் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளலாம்.
புரிந்ததா ராஜூ. குத்துச் சண்டையில் இது முதல் பாடம்— தற்காப்பு செய்துகொள்ளக் கற்பது.
அடடே, நேரமாகி விட்டது! படிக்கப் போ ராஜூ. பிரஷ்கொண்டு பற்களைத் துலக்கினாயா?
ஓ! தினந்தோறும் காலையில் துலக்குகிறேனே, அப்பா!
அது போதாது ராஜூ. பற்களைச் சிதைக்கும் உணவுத் துகள்களை நீக்கும் பொருட்டு, இரவும் பகலும் பற்களைத் துலக்க வேண்டும், பிரஷ் கொண்டு. அதோடு ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்க வேண்டும்—அவற்றை ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வைத்திருக்க இதுவே வழி.
வா, நாமிருவரும் போர்ஹன்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
சரி, அப்பா.
Forhan's FOR THE GUMS
ஃபோர்ஹன்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்

-- பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 19
டிசம்பர் 22, 1974
ஆனந்த, மார்கழி 7.

■

சந்தா விவரம் :

உள்நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளிநாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25-00


மானேஜர் :
கோகுலம்
கல்விப் பூங்கா,
சென்னை - 600031



அட்டையில் இட்டார் இறுவன் :
''காற்றினிலே வரும் கீதம்
- என்
கைவழியே வந்த நாதம்

வண்ணப் படம் :

எஸ். அலாத



திம்மராயனுடைய அதிர்ஷ்டம்

ராஜாஜி

அந்த வருஷத்தில் வேனிற் காலம் வந்ததும் பல ஊர்களில் பேய் நாய்கள் கடித்து அநேகம் பேர்கள் இறந்து விட்டார்கள் என்பதைக் கண்டு எச்சில் உண்டு தெருக்களில் வாழும் நாய்களை ஒழித்துவிட உத்தரவு பிறந்தது.

நாய்களை அடித்துக் கொன்று, கச்சேரியில் கொண்டு வந்து காட்டி, ஆண் நாயாயிருந்தால் இரண்டணா, பெண் நாயாயிருந்தால் மூன்று அணாவாகப் பரிசு பெறலாம் என்று உத்தரவு பிறந்தது.

ஏழைகள், பிழைப்பில்லாதவர்கள் இவர்களுக்கு இது ஓர் ஆசை காட்டியாகும் என்று தாசில்தார்களுக்கெல்லாம் தெரியப்படுத்தித் தண்டோரா போட்டார்கள்.

சில ஊர்களில் நாய்களைக் கொன்றார்கள். கொன்று இழுத்துப் போவதைத் தெருவில் நின்று கொண்டு குழந்தைகள் பார்ப்பார்கள். குழந்தைகளுக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் கண்ணில் ஜலம் வடியும். பெரியவர்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு அந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமல் வேறு ஏதேனும் எடுத்துக் கொண்டு பேசுவார்கள்.

அநேக ஊர்களில் யாரும் நாய்களை அடித்துக் கொல்ல முன்வரவில்லை. இரண்டு அணாவுக்கு யாராவது இந்தப் பாபத்தைக் கட்டிக் கொள்வார்களா?

சேலம் ஜில்லாவில் பேய் நாய்கள் உபத்திரவம் அதிகம். அதனால் அந்த ஜில்லாவின் கலெக்டர் இரண்டணாவுக்கு யாரும் வரவில்லை என்பதைக் கண்டு பரிசை உயர்த்தினார். நாய்ப் பரிசை ஆண் பெண் வித்தியாசமின்றி ஒரு ரூபாயாக்கினார்.

ஒரு ரூபாய் என்று விளம்பரமானதும் பழைய கோட்டை சேந்தி திம்மராயன், கள்ளுக்கடை ஏலத்தில் எடுத்துப் பணக்காரன் ஆனவன், தன் ஆட்கள் நாலு பேர்களைக் கூப்பிட்டான்.

''அடே முனுசாமி! நான் சொல்லுவதைக் கேள். சர்க்கார் உத்தரவு ஆனபடியால் பாபம் இல்லை. நீ உனக்கு வேண்டியவர்களுக்குச் சொல்லி ஏற்பாடு செய். நாய் ஒன்றுக்கு எட்டணா வாங்கித் தருகிறேன். கச்சேரி வேலையெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்றான்.

''அப்படியே!'' என்றான் முனுசாமி.

மற்ற மூவர்களும் தங்கள் தங்கள் சேரிகளில் சொல்லி நாய் அடிப்பதற்கு ஆள் சேர்த்தார்கள்.


சேந்தி திம்மராயன் தாசில்தாரைக் கண்டு நூறு ரூபாய் முன் பணம் பெற்றுக் கொண்டான். ஒரு குப்பை வண்டியும் அவனுக்குத் தரப்பட்டது. 'தெருவில் இழுத்துக் கொண்டு போவது நன்றாக இல்லை. எல்லாரும் ஏசுகிறார்கள். வண்டியில் போட்டு ஓட்டிக் கொண்டு கச்சேரியில் காட்டிக் கணக்குத் தீர்த்துக் கொள்ளலாம்' என்று முடிவு செய்தான்.

தான் ஐம்பது ரூபாய் எடுத்துக் கொண்டான். மிகுதி ஐம்பது ரூபாயைத் தன் கங்காணிகளுக்குப் பிரித்துக் கொடுத்தான். கங்காணி, நாய் ஒன்றுக்கு ஐந்தணா என்று அடிக்கும் ஆட்களுக்குக் கொடுத்துவிட்டு, மூன்றணா தான் எடுத்துக் கொள்வான். வேலை மும்முரமாக நடந்தது.

ஊரில் உள்ள நாய்கள், நாயடிக்கும் ஆட்களின் அடையாளம் கண்டுகொண்டன. தெருவில் அவர்கள் யாரேனும் தலை காட்டினால் பலமாகக் குரைக்கும். ஓடிப் போய்ப் புழக்கடைகளில் ஒளிந்து கொள்ளும்.

ஆயினும் ஐந்தணாவின் சக்தி பெருஞ் சக்தி. முயற்சியும் சாமர்த்தியமும் நாயடிக்க முன் வந்தவர்கள் காட்டினார்கள். திம்மராயனுடைய ஏற்பாடு வெற்றிகரமாக நிறைவேறி வந்தது.

பஞ்சாங்கம் கிட்டய்யர் வீட்டில் புழக்கடையில் ஒரு தெரு நாய் குட்டி போட்டது. குட்டிகளைப் போட்டு அங்கே வைத்து எப்படியோ காப்பாற்றி வந்தது. இங்குமங்கும் கிடைக்கும் எச்சில் இலைகளை நக்கிப் பிழைத்து, குட்டிகளுக்கும் பால் கொடுத்து வந்தது. கிட்டய்யருடைய குழந்தைகளுக்கு நாய்க்குட்டிகளைக் கண்டு வெகு சந்தோஷம். தாய் நாய் வந்து பால் கொடுப்பதைப் பார்த்துக் கொண்டு ஆனந்தம் அடைவார்கள். ஒரு நாள் அந்த நாய் புழக்கடைக்குள் புகுந்து குட்டிகளுக்குப் பால் கொடுத்து விட்டு அவசரமாக வெளியே தன் தொங்கும் மடியை ஆட்டிக் கொண்டு ஓடிற்று. வாசலண்டை வந்ததும் தலைமேல் ஓங்கி அடித்து விட்டான், தடியை வைத்துக் கொண்டு பதுங்கியிருந்த தாசரி. நாயடிக்கும் ஆட்களில் இவன் ஒருவன்.




ஒரு சத்தமின்றி நாய் அப்படியே தரையில் உயிரற்று விழுந்தது. ஐந்தணா வந்துவிட்டது தாசரிக்கு. அவன் எஜமானன் கங்காணி மூன்று அணாவும் சேந்தி திம்மராயன் அரை ரூபாயும் அந்த நாயின் மேல் சம்பாதித்து விட்டார்கள். ஒரே அடியில் சம்பாதித்து விட்டார்கள்!

"பாவி!" என்றாள் வாசலில் நின்ற கிட்டய்யருடைய மனைவி. பக்கத்தில் அவள் குழந்தை அம்மாவின் புடவை நுனியைப் பிடித்துக் கொண்டு நின்றாள். எதிர்வீட்டுக் கூரையின் மேல் ஒரு காக்கை உட்கார்ந்து, ''காவ்! காவ்!'' என்று கத்திற்று. அதன் பொருளும் அதுவே! ''ஐயோ பாவம்'' என்று.

ராக்ஷசர்களைப் பற்றிப் படிக்கிறோம். பறவைகளும் பிராணிகளும் நம்மை எல்லாம் ராக்ஷசர்களாகத்தான் இப்போதும் எண்ணி வருகின்றனவோ, என்னவோ!

சாண்டாக்ளாஸும் சறுக்கு வண்டியும்



வாண்டு மாமா

ஸாண்டாக்ளாஸுக்கு அப்போது அத்தனை வயதாகவில்லை. தாடி பனி வெள்ளையாகவில்லை. வடதுருவ வாசியான அவருக்குப் பொழுதே போகவில்லை. கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக உலகத்துக் குழந்தைகளுக்குப் பரிசு தரும் பழக்கமும் அவரிடம் அப்போது இல்லை. பனிப் பாறைகளில் சறுக்கி விளையாடி அலுத்துப் போன வேளையில் ஒரு நாள் சில பனி மண்டலப் பறவைகள் ஸாண்டாவிடம் கூறின: ''உலகின் மற்றப் பகுதிகளில் வாழும் குழந்தைகள் சோம்பிக் கிடக்கின்றன. ஏனென்றால் அவர்களுக்கு விளையாடப் பொம்மைகள் இல்லை.''

இதைக் கேட்டதும் ஸாண்டாவிற்குப் பளீர் என்று ஒரு யோசனை தோன்றியது. உடனே தன் வீட்டுக்குப் போனார். பொம்மைத் தொழிற்சாலையாக மாற்றினார் தம் வீட்டை. அவருடைய நண்பர்களான வனதேவதைகளையும், குள்ளர்களையும் கூப்பிட்டார். எல்லாருமாகச் சேர்ந்து விதம் விதமான விளையாட்டுப் பொம்மைகளையும் பொருள்களையும் புத்தகங்களையும் வருஷம் முழுவதும் உருவாக்கிக் குவிக்கலானார்கள். துருவக் கரடி, ஸீல், துருவ நாய், கலைமான் இவையும்கூட ஸாண்டாவின் நண்பர்கள்தான். தாங்களும் பொம்மை செய்ய உதவுவதாக முன்வந்தன. ஆனால் அவைகளால் தொழிற்சாலையில் குழப்பம்தான் ஏற்பட்டது. துருவக் கரடி தான் செய்த பொம்மைகளை வைத்து விளையாட, அவை கீழே விழுந்து உடைந்தன. சங்கீதப் பெட்டியின் இசைக்கு ஏற்ப ஸீல் தன் வாலின்மீது நின்று நடனமாட ஆரம்பித்து விட்டது. துருவ நாய்களோ; பூனை, முயல் பொம்மைகளை நிஜமென்று எண்ணித் துரத்தலாயின. கலைமான்கள் பலூனை மூக்கால் உந்தித் தள்ள அது அவைகளின் கொம்பில் விழுந்து படார் என்று உடைந்தன. ஆகவே ஸாண்டா எல்லா மிருகங்களையும் வெளியில் தள்ளிக் கதவைச் சாத்திக்கொண்டது.

ஒரு வகையாக ஏராளமான பொம்மைகள் செய்து குவிக்கப்பட்டன. தொழிற்சாலைக்குள் இனிஇடமில்லை. அத்தனை பொம்மைகள். உழைத்துக் களைத்துப்போன ஸாண்டா அப்பாடா என்று உட்கார்ந்தார். குள்ளர்களும், குட்டிச் சாத்தான்களும் தேவதைகளும் சுருண்டு முடங்கிக் கொண்டன தூங்குவதற்காக.

''இத்தனை பொம்மைகளையும் எல்லாக் குழந்தைகளுக்கும் விநியோகித்தாக வேண்டுமே. அதோ என்னுடைய சறுக்கு வண்டி. இதோ பொம்மைகள். ஆனால் வண்டியை இழுத்துப் போவது யார்?'' என்று கவலையுடன் கூறினார் ஸாண்டா.

''நாங்கள் இழுத்துப் போகிறோம்'' என்று முன்வந்தன துருவக் கரடிகள்.

ஸாண்டாவுக்கு உதவுவதில் ஒரு பெருமை அவைகளுக்கு.

''நாங்கள் வருகிறோம்'' என்றன கலைமான்கள்.

''எங்களை அழைக்கக் கூடாதா?'' என்றன ஸீல்கள்.

''உங்களையா?'' என்று நகைத்தன நாய்கள். ''உங்களை நம்பினால் ஐந்து வருஷத்துக்குப் பிறகல்லவா குழந்தைகளுக்குக் கிடைக்கும்!'' என்றன - ஸீல்களின் சாவதானமாக நகரும் குணத்தைக் குத்திக் காட்டி.

இதனால் வேதனையடைந்த ஸீல்களின் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டது. அவை உணர்ச்சி வசப்படக்கூடியவை. அவைகளின் கண்ணீரைக் கண்ட ஸாண்டா தவித்துப் போனார். ஏனென்றால் அவருக்கு இளகிய உள்ளம்.


''அதனால் என்ன. ஸீல்கள் வேகமாகப் போகாவிட்டால் பாதகமில்லை. முன்னதாகவே கிளம்பினால் போகிறது. என்று கூறி அவைகளைத் திருப்திப்படுத்தத் தன் சறுக்கு வண்டியில் பூட்டி, பொம்மை மூட்டைகளை ஏற்றிக் கொண்டு கிளம்பினார். பனிக்கட்டிப் பாதையில், கைகளையும் வாலையும் ஆட்டி ஆட்டி ஸீல்கள் வண்டியை இழுத்துக் கொண்டு நகர்ந்தன. ரொம்ப மெதுவாகப் போயின. ஸாண்டாவும் பொறுமையை இழக்கவில்லை. வடதுருவத்திலிருந்து பதினைந்து டிகிரி தெற்கே போனதும் ''அலாஸ்கா பக்கமாகப் போங்கள்'' என்றார்.

''ம்...ஹூம்...முதலில் க்ரீன்லாந்துக்குத்தான் போகணும். என் மாமா அங்கு வசிக்கிறார். ரொம்ப நாளாக அங்கு போக வேண்டுமென்று ஆசை. அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே விடுவேனா?'' என்றது ஒரு ஸீல்.

''அதெல்லாம் முடியாது. ஆஸ்திரேலியக் கடலில் உள்ள மீன்கள் ரொம்ப ருசியாக இருக்குமென்று கேள்வி. ஆகவே நாம் முதலில் ஆஸ்திரேலியாவுக்குப் போவோம்'' என்று அந்தப் பக்கமாக நகர்ந்தது இன்னொரு ஸீல். இப்படி ஒவ்வொரு ஸீலும் ஒவ்வொரு இடத்துக்குப் போக விரும்பின. பாவம் ஸாண்டா க்ளாஸ்!

''நம்முடைய பிரயாணத்தின் நோக்கம் ஒவ்வொரு குழந்தைக்கும் பரிசுப் பொருள் கொடுப்பதுதான். பிரயாணத்தின் முடிவில் நீங்கள் எல்லாருமே எல்லா இடங்களையும் பார்த்துவிடலாம். ஆகவே என் சொல்படி கேளுங்கள்'' என்று சொல்லிப் பார்த்தார். ஆனால் பொல்லாத ஸீல்கள் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே அவைகளுடன் வடதுருவத்துக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை அவருக்கு.

''இந்தக் காரியத்துக்கு நாய்கள்தான் சரி. சறுக்கு வண்டி இழுப்பதில் அனு



பவம் உண்டு அவைகளுக்கு'' என்று தனக்குள் கூறிக்கொண்டே ஸாண்டாகிளாஸ் துருவ நாய்களை வண்டியில் பூட்டித் தம் பிரயாணத்தை மறுபடி தொடங்கினார். ஆனால் அலாஸ்கா போவதற்குள் அவைகளும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளலாயின.

''நீ உன் பங்குக்கான பளுவை ஒழுங்காக இழுத்தால்தான் நான் என் பங்குக்கான பளுவை இழுப்பேன்'' என்றது ஒரு நாய்.

''நான் என்னுடையதை ஒழுங்காகத்தான் இழுக்கிறேன். நீதான் சரியாக இழுக்கவில்லை'' என்றது இரண்டாவது நாய்.

''நீங்கள் சண்டை போட்டுக் கொண்டு எல்லாச் சுமையையுமே என்னை இழுக்கச் செய்கிறீர்களே இது நியாயமா?'' என்றது இன்னொரு நாய்.

''போதும் போதும்! சண்டை கூடாது. யார் வேலை செய்யவில்லை என்பதை ஆராய இது நேரமில்லை. அவரவரும் அவரவருடைய கடமையைச் செய்வோம். பிறரைப் பற்றிக் குறை கூறக் கூடாது. எப்படியாவது இந்தப் பொம்மைகளை யெல்லாம் குழந்தைகளின் கையில் போய்ச் சேர்க்கவேண்டும். அதுதான் நமது குறிக்கோள்'' என்று சமாதானப் படுத்தினார் ஸாண்டா க்ளாஸ். இதைத் துருவ நாய்களும் ஏற்றுக் கொண்டன. ஆனால் ஒவ்வொன்றும் தானே அதிகமாக உழைப்பதாகக் கருதின. முடிவில் முதல் நாய் 'இனி என்னால் மேலே போக முடியாது' என்று நின்று விட்டது. இதனால் மற்ற நாய்களின் ஓட்டமும் தடைப்பட எல்லாமே நின்றுவிட்டன. ஸாண்டாவும் வேறு வழியில்லாமல் மறுபடியும் மூட்டைகளுடன் வட துருவத்துக்குத் திரும்பும்படியாயிற்று.

கலைமான்களும் துருவக் கரடிகளும் ஸாண்டாவுக்கு உதவ முன்வந்தன. கலைமான்கள் எப்போதுமே சுயநலமில்லாத சுத்தமான பிராணி. ஆகவே போட்டியைத் தவிர்க்க துருவக் கரடிகளுக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டன.

இந்தத் தடவை எப்படியும் வெற்றியோடு போய்த் திரும்பலாம் என்று நினைத்தார் ஸாண்டா. ஏனென்றால் துருவக் கரடிகள் தகராறு செய்யாத பிராணிகள். ஒரு சட்டுப்பாட்டுக்கு இணங்கக் கூடியவை. துருவக் கரடிகள் உற்சாகமாக வண்டியை இழுத்துக் கொண்டு ஓடின. ஸாண்டாவும் பிடிப்பிடியபடி குஷியாகச் சவாரி செய்தார். ஊசி இலைக் காடுகளுக்கு அருகே வரும் வரைதான் இந்த வேகமும் மகிழ்ச்சியும்.

''கொஞ்சம் பொறுங்கள். அதோ அந்த மரத்தில் ஏறிவிட்டு வருகிறேன்'' என்று கூறி ஒரு பெரிய மரத்தின் மீது ஏறலாயிற்று முதல் கரடி. ஸாண்டா 'நில்லு நில்லு' என்று கத்தக் கத்த அது மட மட வென்று ஏறலாயிற்று, மற்ற கரடிகளையும் இழுத்துக்கொண்டு.

''இல்லே, இல்லே... நான் அதோ அங்குள்ள குகைக்குள்ளே போய் ஆராயப் போகிறேன். என்னை விட்டுவிடு'' என்று வேறு திசையில் இழுத்தது இரண்டாவது துருவக் கரடி.

ஸாண்டா தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார்.. ''இந்தக் கரடிகளின் குணம் எப்போதுமே இப்படித்தான். இதை மறந்து போய் இவைகளை அழைத்து வந்தேனே. இந்த வேலைக்கு இவை அருகதையற்றவை'' என்ற முடிவோடு மூன்றும் தடவையாக, கிளம்பிய வடதுருவத்துக்கே திரும்பிப் போனார், பாவம்!

முடிவாகக் கலைமான்களைச் சறுக்கு வண்டியில் பூட்டிக் கொண்டு கிளம்பினார். இந்தத் தடவையாவது திரும்பி வராமல் பரிசுப் பொருள்களை வினியோகித்து விட்டுத் திரும்ப வேண்டுமே என்ற கவலையோடு வண்டியில் அமர்ந்திருந்தார் ஸாண்டா. அவரது தொங்கிய முகத்தைக் கண்ட முதல் கலைமான் தன் தோழர்களிடம் கூறியது: ''நாம் எல்லாரும் ஒரு குறிக்கோளுடன் போகிறோம். — இந்தப் பரிசுகளையெல்லாம் உலகத்துக் குழந்தைகளுக்குச் சேர்ப்பிப்பதற்காக. ஆகவே, நமக்குள் எந்த வேற்றுமை இருந்தாலும் அவைகளையெல்லாம் மறந்து விட்டுச் செயல்பட வேண்டும். ஒற்றுமையாக உழைப்போம். கடமை முடியும்வரை கட்டுப்பாடாகப் பணி புரிவோம்'' என்று கட்டளையிட்டது. ஸாண்டாவின் வியப்பை அதிகரிக்கும் வகையில் எட்டுக் கலைமான்களும் வண்டியை இழுத்துக் கொண்டு காற்றெனப் பறந்தன. அவர் செலுத்திய திசைகளிலெல்லாம் சென்றன.

தங்களை மறந்து, எடுத்துக்கொண்ட காரியத்தை ஒற்றுமையாகச் செய்து முடிக்கும் கடமை உணர்வோடு செயல்பட்ட கலைமான்களையே ஸாண்டா க்ளாஸ் அன்று முதல் தம் கிறிஸ்துமஸ் பண்டிகைப் பயணத்துக்குப் பயன்படுத்தலானார். இப்போது புரிகிறதா ஸாண்டா க்ளாஸின் சறுக்கு வண்டியைக் கலைமான்கள் ஏன் இழுக்கின்றன வென்று.



வாடாமலர்

- ராஜாஜி

நமது நாட்டில் சோம்பி யிருப்பது பெரிய குற்றமாகக் கருதப்பட வேண்டும்.

கொலைகாரன் ஒருவனைத்தான் கொல்கிறான்.

ஆனால் சோம்பேறியாக உள்ள ஒரு குமாஸ்தாவோ நாட்டின் நிர்வாகத்தையே கொல்கிறான்.

□

உனக்கு உரிமையில்லாத பொருளை எடுத்துக் கொண்டு போனால் அழிவுதான். இராவணன் சீதையைக் கொண்டு போன மாதிரி.

□

ஒரு மனிதர் கோபமடையும்போது அவர் மனத்துக்குள்ளேயே புயல் எழும்புகிறது. மனச்சாட்சியை அது அழித்து விடுகிறது.

□

நம்பிக்கை யின்றிச் சந்தேகப்பட்டுக் கொண்டே யிருந்தால் மாலுமியில்லாத படகைப் போல், கடலில் அலைந்து காற்றில் அடிபட்டுப் போவோம்.

□

பொது இடங்களில பேசுவதற்கும், தனிப்பட்ட முறையில் சம்பாஷிப்பதற்கும் இடையே வித்தியாசம் இருப்பதாக நினைத்து விடாதீர்கள். பொது இடங்களில் பேசும்போது எவ்வளவு கட்டுப்பாட்டுடனும் ஜாக்கிரதையுடனும் பேசுவோமோ அதேபோல் தனிப்பட்ட சம்பாஷணையிலும் நடந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு துளி நீராகச் சேர்ந்துதான் சமுத்திரமாகிறது. அதேபோல் ஒவ்வொரு சம்பாஷணையும் சேர்ந்துதான் தேசிய வாழ்வு உருவாகிறது.

மகாத்மா காந்தியிடம் நான் கற்றுக் கொண்ட பாடம் இதுதான்.

□

மனத்தில் எழும் தீய எண்ணங்களை எல்லாம் அகற்றிவிட வேண்டும்.

ஒரு தீய எண்ணத்துக்கு இடம் தந்தால், உடனே கோட்டைத் துவாரத்து வழியாகப் பகைவருடைய படைகள் நுழைவது போல ஆயிரக் கணக்கான தீயவைகள் வந்து நுழைந்து விடும்.

□

உயர்ந்த நோக்கங்களைக் கொள்ளாத வாழ்க்கை பயனற்றது. பிறருக்குத் தொண்டு செய்தல், தியாக புத்தி ஆகியவை நாம் இந்த வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும்.

□

ஏழைகள்பால் அனுதாபம் காட்டாவிடில் நமக்கு நாகரிகம் இல்லையென்றுதான் பொருள்படும்.

□

நாம் உடுத்திக் கொள்வதற்கு அன்னியத் துணி இறக்குமதி செய்தால், நம்மை ஆள்வதற்கு அந்நியரை இறக்குமதி செய்வது போலாகும்.

□

கௌரவப் பட்டங்கள் குறித்துப் பல முறை எனக்குச் சிரிக்கத் தோன்றியது உண்டு.

□

சுதந்திர இந்தியாவுக்கு விரோதமாக ஒருவன் புரியக்கூடிய மிகப் பெரிய குற்றம் சோம்பித் திரிவதுதான்.

□

வேலையில் உயர்ந்தது, தாழ்ந்தது என்று எதுவும் கிடையாது என்று நம்புகிறவர்களில் நானும் ஒருவன்.

நாம் செய்யும் வேலை நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். தீமையை உண்டாக்குவதாக இருக்கக் கூடாது என்பதுதான் கவனிக்கப்பட வேண்டும்.

□

கேட்டுப் பெறுவதல்ல அன்பு. பிறரிடம் நாம் அன்பு செலுத்தினால் அவர்களால் நேசிக்கப்படுவோம்.

□

மதுபானத்தினால் சிரம பரிகாரம் அடையலாம் என்று எண்ணுவது, கடன் வாங்கிய பொருளை ஆஸ்தி என்று நினைப்பது போலாகும்.



குழந்தைக்கு ஏற்ற பரிசு

கிழக்குப் பகுதியிலே மூன்று அரசர்கள் இருந்தார்கள். அம்மூவரும் ரொம்ப அறிவாளிகள். வானத்திலே ஒளிவிடும் நட்சத்திரங்களைக் கொண்டு நடக்கப்போகும் நிகழ்ச்சிகளைக் கூறும் திறமை படைத்தவர்கள் இம்மூவரும். ஒரு சமயம் வானத்திலே ஓர் அற்புத நட்சத்திரம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கலாயிற்று. அதைக் கண்ட இம்மூன்று அறிவாளி அரசர்களும் எங்கோ தொலை தூரத்தில் உள்ள ஒரு நாட்டில் உலகை உய்விக்கப் போகும் ஒரு மகான் அவதரிக்கப் போகிறார் என்பதை அறிந்தார்கள். அவர்கள் கனவிலே அந்த நட்சத்திரம் 'என்னைப் பின்தொடர்ந்து வருவீர்களானால் அந்த அற்புதக் குழந்தை பிறக்கும் இடத்துக்கு அழைத்துப் போகிறேன்' என்று கூறியது. அது ஒரு நீண்ட பயணம்.

மூன்று மன்னர்களும் அந்தப் புனிதப் பயணத்துக்குத் தயாரானார்கள். தங்களிடமுள்ள செல்வங்களில் சிறந்ததையெல்லாம் எடுத்துச் சேகரித்துக்கொண்டார்கள்; அந்தப் புனிதக் குழந்தைகுப் பரிசளிக்க. தங்கம், வாசனைப் பொருள்கள், அகில், சந்தனம், சாம்பிராணி இப்படி எத்தனையோ சிறப்புப் பரிசுகளைக் கொண்ட மூட்டை ஒட்டகங்களின் முதுகில் ஏற்றப்பட்டன. எல்லாம் தயாராகிவிட்டன. நட்சத்திரமும் இவர்களை வழிநடத்திச் செல்லத் தயாராக வானத்தில் சிரித்துக் கொண்டிருந்தது.

மூவரிலே ஓர் அரசர் கொஞ்சம் இள வயதினர். மற்ற இருவரும் முதியவர்கள். இள வயதினரான மன்னர் பயணத்துக்கு தயாராகவில்லை. இன்னும் எதையோ தேடிக் கொண்டிருந்தார். பிறக்கப்போகும் குழந்தையான மன்னர்மன்னருக்குக் கொடுக்க அவர் எத்தனையோ பரிசுப் பொருள்களை சேகரித்து ஒட்டகத்தின் மீது ஏற்றிவிட்டார். இருந்தாலும் ஏனோ அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் ஏதோ தேவை போலப் பட்டது. ஏதோ குறை இருப்பதாக எண்ணியது அவருடைய உள்ளம். குழம்பிக் கொண்டிருந்தார். இப்படி இவர் தாமதிப்பதைக் கண்ட முதியவர்களான இரு மன்னர்களும் முணுமுணுத்தனர். அந்த இள வயது மன்னரால் அவர்களுக்குச் சமாதானம் தரவும் முடியவில்லை.

''நேரம் போய்க்கொண்டிருக்கிறது. நம்மை வழி நடத்திச் செல்லும் நட்சத்திரம் மறைந்து போனால் பிறகு நம்மால் உலகை உய்விக்கப் பிறக்கப்போகும் மன்னர் மன்னரான குழந்தையைக் காண முடியாது'' என்று கடுகடுத்தார்கள் அவ்விருவரும். பாரம் ஏற்றி நின்ற ஒட்டகங்களும் பொறுமை இழந்து இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டிருந்தன. பாலைவனத்தில் அவைகளின் நிழல் நீண்டு கொண்டே வந்தது. இளவயதுடைய மன்னர் இன்னும் கிளம்பவில்லை.



மாட்டுத் தொழுவில் பிறந்தவர்
மக்கள் கண்ணைத் திறந்தவர்
காட்டும் அன்பு ஒன்றையே
கடவுள் என்று சொன்னவர்.
— சாரதிதாசன்

திடீரென்று அவர் முகத்தில் ஓர் ஒளி தோன்றியது. துள்ளி எழுந்தார். அரண்மனைக்குள் ஓடினார். அவர் சின்னக் குழந்தையாக இருந்தபோது விளையாடிய அவருடைய அறைக்குள் புகுந்தார். அங்கு கிடந்த பல விளையாட்டுப் பொருள்களையும் உற்றுப் பார்த்துவிட்டு ஒதுக்கி ஏதோ ஒன்றை எடுத்துக் கொண்டு மறுபடி ஒட்டகத்தினருகில் ஓடோடி வந்தார். அவர் கொண்டுவந்த பொருள் சூரிய ஒளி பட்டுப் பளபளத்தது.

முதியவர்களான இரு மன்னர்களும் அவர் ஏதோ புதிய அபூர்வமான விலை மதிப்பற்ற பரிசுப் பொருளைக் கொண்டு வந்திருக்கிறார் போலும் என்று நினைத்தார்கள். அந்த அதிசயப் பொருள் என்னவாக இருக்குமென்று அறிய ஆவலுடன் குனிந்து பார்த்தார்கள்.


இள வயது மன்னரின் கையில் இருந்தது ஒரு பொம்மை. அதை மணல் மீது வைத்தார் அவர். அது ஒரு நாயின் பொம்மை. அதன் மீதிருந்த சாயங்களெல்லாம் உதிர்ந்து அதன் உலோகம் தெரிந்தது. அதனால்தான் அதன் மீது சூரிய ஒளி பட்டுப் பளபளத்தது போலும். வியப்புப் பூசியிருந்தவர்களின் முகங்களிலே ஏமாற்றம் படிந்தது. இள வயது மன்னர் அந்த நாய்ப் பொம்மையின் பக்கவாட்டில் இருந்த ஒரு சாவியைத் திருகினார். பலமுறை திருகிய பின் மறுபடி அதை எல்லார் முன்னிலையிலும் தரையில் வைத்தார். இப்போது அந்த நாய்க்குட்டி வாலை ஆட்டித் தாவித் தாவிக் குதித்தது. கீழே உருண்டு புரண்டு விளையாடியது. மெல்லிய குரல்கூட எழுப்பியது. உயிருள்ள நாய்க் குட்டியைப் போல அது அப்படி உருண்டு விளையாடியதைக் கண்ட ஒட்டக ஓட்டியின் குழந்தை கை கொட்டிச் சிரித்து மகிழ்ந்தது. ஆனால் முதியவர்களான அந்த இரு அறிவாளி மன்னர்களும் முகம் கடுகடுக்க முணுமுணுத்தபடி ஒதுங்கிப் போயினர். இளவயது மன்னர் இதற்காகக் கவலைப்படவில்லை. தம் பணியாளனை அழைத்துப் பரிசுப் பொருள் மூட்டையின் மேலாக அந்த நாய்க்குட்டிப் பொம்மையை வைத்துக் கட்டும்படி ஆணையிட்டார்.

''இதென்ன முட்டாள்தனமான காரியம்? எங்கோ தொலை தூரத்தில் பிறக்கப் போகும் புனிதரான அந்த மன்னர்மன்னருக்கு ஏற்ற பரிசா இது?'' என்று வெறுப்புடன் வெடித்தார் முதியவரான மன்னர் ஒருவர்.

இளையவரான அரசர் நிதானமாகப் பதில் கூறினார்: ''மன்னர் மன்னருக்கு ஏராளமான விலைமதிப்பற்ற எத்தனையோ பொருள்கள் பரிசாகத் தர இருக்கின்றன. ஆனால் இது—இந்த நாய்க்குட்டி பெதல்ஹமில் பிறக்கப் போகும் சின்னக் குழந்தை விளையாடி மகிழ்வதற்காக!''

- அவிட்டம்





முன்னொரு காலத்தில் அரபு தேசத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூரை ஹாத்திம் என்ற சிற்றரசன் ஆண்டு வந்தான். அவன் கருணை உள்ளம் கொண்டவன். மக்களுக்கு நன்மை செய்வதுதான் மன்னனின் கடமை என்பதை நன்றாக உணர்ந்த அவன் எல்லோராலும் போற்றப்பட்டான்.

அரபு தேசத்தை ஆண்டு வந்த நாபால் என்னும் மன்னனுக்கு ஹாத்திமின் மீது பொறாமை ஏற்பட்டது. ஒரு சிற்றரசன் பெயரெடுப்பதை அவமானமாகக் கருதிய அவன் ஹாத்திமை ஒழித்துக் கட்ட முடிவு செய்து படையெடுத்து வந்தான்.

பெரிய அரசன் படையெடுத்து வருகிறான் என்று ஹாத்திம் பயப்படவில்லை. ஆனால் தான் எதிர்த்துப் போரிட்டால் பலர் உயிர் இழப்பார்களே என்பதை எண்ணியே அவன் மிகவும் வேதனைப்பட்டான். அதை அவன் அறவே விரும்பவில்லை.

அதனால் எல்லாவற்றையும் துறந்து விட்டுக் காடுகளில் தலைமறைவாகச் சென்று வாழ்ந்தான்.

நாபால் மன்னன் ஹாத்திமை அத்துடன் விட்டு விடுவதாக இல்லை. அவனுடைய சொத்துக்களைத் தனதாக்கிக் கொண்டதோடு அல்லாமல் அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐந்நூறு பொற் காசுகள் பரிசாகக் கொடுப்பதாகவும் பறை அறிவித்தான்.

நாட்கள் செல்லச் செல்ல மக்களில் பலர் ஹாத்திமின் உத்தம குணங்களை மறந்துவிட்டனர். அவனை எப்படியாவது பிடித்துப் புதிய அரசனிடம் ஒப்படைத்துப் பரிசுப் பணத்தைப் பெற வேண்டும் என்று அவனைத் தேடக் கூட ஆரம்பித்தார்கள்.

ஒரு நாளைக்கு வயது முதிர்ந்த விறகு வெட்டி ஒருவன் தன் மனைவியோடு காட்டில் சுள்ளி பொறுக்குவதற்காகச் சென்றான். அவர்கள் இருவரும் பகல் முழுதும் தங்களால் சுமக்க முடியும் அளவுக்குச் சுள்ளிகளைச் சேகரித்துக் கட்டி, தலையில் தூக்கிக் கொண்டு, ஊரில் விற்றுப் பிழைத்து வந்தார்கள்.

அன்று மிகவும் களைப் படைந்து விட்ட அவர்கள் இருவரும் ஓரிடத்தில் சுமைகளைக் கீழே இறக்கி வைத்து விட்டுத் தரையில் உட்கார்ந்தனர்.

கைகால்களை வலி தீர உதறிக் கொண்ட கிழவி முணு முணுத்தாள்.

"என்ன வாழ்க்கையடா இது? பொழுது போனால் பொழுது விடிந்தால் உழைத்தே சாகவேண்டியிருக்கிறது. சாண் வயிறு நிறைய இந்த உலகத்தில் எவ்வளவு பாடுபடவேண்டியிருக்கிறது! இந்த ஹாத்திம் மட்டும் நம்மிடம் அகப்பட்டுக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அரசர் நாபாலிடம் ஒப்படைத்து விட்டு ஐந்நூறு பொற்காசுகளை வாங்கிக் கொள்ளலாம். பிறகு இப்படிக் கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை. சந்தோஷமாக வாழலாம்."

விறகு வெட்டிக்குக் கோபம் வந்து விட்டது. "என்னடி பிதற்றுகிறாய்? ஹாத்திம் எவ்வளவு நல்ல மனிதர்! அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டு அதனால் கிடைக்கும் கைக் கூலியை வைத்துக் கொண்டு வாழ்வதா? அதைவிட இந்த உயிரை இப்படியே விட்டுவிடலாம்" என்று அவளைச் சற்று உரக்கவே கடிந்து கொண்டான்.

இவர்கள் பேசிக் கொள்வதை அருகில் குகையிலிருந்த ஹாத்திம் கேட்டுவிட்டார். அவருடைய பொன்னான இதயம்

கிழவியின் வேதனை நிறைந்த வார்த்தை களைக் கேட்டதும் வருந்தியது.

'உற்றம் சுற்றம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரு நாடோடியைப் போல் ஒளிர்து வாழும் என்னுடைய வாழ்க்கை யால் யாருக்கு என்ன லாபம்! கால் காசுக்குக் கூடப் பெறுமானம் இல்லாத நான், இந்த வயதிலும் உழைத்துப் பிழைக்க வேண்டிய நிலையில் உள்ள இவர்கள் இருவருக்கும் ஐந்நூறு பொற்காசுகளைச் சம்பாதித்துத் தர முடியும் என்னும்போது, தயங்குவது தவறு' இவ்வாறு முடிவெடுத்த ஹாத் திம் அவர்கள் எதிரில் வந்து நின்றான்.

''பெரியவரே! நான்தான் உங்கள் மனைவி குறிப்பிட்ட ஹாத்திம். என்னை அரசனிடம் ஒப்படைத்து விட்டு நீங்கள் பரிசுப் பணத்தை வாங்கிக் கொள் ளுங்கள்'' என்று கூறினான்.

''மேன்மை தங்கிய ஹாத்திம் அவர்களே! உங்களை நான் அரசரிடம் ஒப்படைத்தால் எனக்குப் பரிசு கிடைப் பது என்னவோ உண்மை. ஆனால் உங்கள் கதி என்னவாகும்? அவர் உங் களைக் கொன்றுவிட்டால், அதற்குப் பிறகு நான் மன நிம்மதியோடு வாழ முடியுமா?'' என்று கேட்டான் விறகு வெட்டி.

ஹாத்திம் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அந்த நல்ல மனிதன் மனம் இசையவில்லை.

''இதோ பாருங்கள்! நீங்கள் இங் கேயே இப்படி நின்று கொண்டிருந் தால் உங்களை வேறு யாராவது பார்த்து விடுவார்கள். பிறகு உங்கள்பாடு கஷ்ட மாகிவிடும்.''

விறகு வெட்டி கூறி முடிக்கவில்லை. அந்த வழியாகப் போன மூன்று வழிப் போக்கர்கள் ஹாத்திமைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டனர். அவர்கள் ஒருங்கே பாய்ந்து ஹாத்தி மைக் கட்டிப் பிடித்து அரசர் நாபாலின் முன்னால் இழுத்துச் சென்றனர். விறகு வெட்டியோ, கண்களில் கண்ணீர் பெருக அவர்களைத் தொடர்ந்து சென்றான்.

அவர்களைப் பார்த்த அரசர் நாபால் பெருமகிழ்ச்சி அடைந்தார்.


''உங்களில் யார் ஹாத்திமைப் பிடித்து இங்கே கொண்டு வந்தது?'' என்று கேட்டார்.

வழிப் போக்கர்கள் மூவரும் அரசர் முன்னால் வந்து நின்றனர்.

''நான் அவனைப் பிடித்தேன்'' என்றான் ஒருவன்.

''நான்தான் கட்டினேன்'' என் றான் அடுத்தவன்.

''நான்தான் இங்கே இழுத்து வந் தேன்'' என்று மூன்றாமவன் கூறினான்.



விறகுவெட்டியோ வாய் திறக்கவில்லை. ஹாத்திம் கூறினார்: ''அரசே!. என்னை அந்த மூவருமே பிடிக்கவில்லை இந்த விறகுவெட்டிதான் உண்மையில் என்னைப் பிடித்து இங்கு வரும்படி செய்தது. இவர்கள் மூவரும், இந்தக் கிழவனிடமிருந்து பரிசைத் தட்டிக்கொண்டு போவதற்குத் திட்டமிடுகிறார்கள்.''

அரசர் விறகுவெட்டியைக் கூப்பிட்டு விசாரித்தார். விறகுவெட்டி நேர்மையானவன். அவனால் பொய் சொல்ல முடியவில்லை. நடந்ததை நடந்தபடி அவன் அரசரிடம் கூறினான். ''என் வறுமையைப் போக்க விரும்பி தன்னையே தியாகம் செய்துவிடத் துணிந்த ஒரு மகான் இவர்'' என்றான்.

நாபால் அரசருக்கோ ஆச்சரியம் தாளவில்லை.

கேவலம்! ஒரு கிழட்டு விறகுவெட்டிக்கு நன்மை செய்வதற்கு விரும்பி அதன் பொருட்டுத் தன் . உயிரைத் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கும் ஒருவரை அவர் சிற்றரசர் என்பதால் மெச்சாமல் இருக்க அவரால் முடியவில்லை.

''ஹாத்திம்! நீ என்னைவிட எவ்வளவோ சிறந்தவன் என்பதை நான் உணர்ந்து கொண்டுவிட்டேன். உன் ஊரையும் சொத்தையும் உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன். என்றும் போல் நீயே ஆட்சி செய்து வா. இந்தக் கிழவனுக்கு வேண்டிய அளவு பொருளை என் பொக்கிஷத்திலிருந்து நீயே எடுத்துக் கொடு. வீண் பெருமை பேசிய இவர்கள் மூவருக்கும் கசையடி கொடுக்கப்படட்டும்'' என்றார்.

''அரசே! உங்களுக்கு நன்றி. ஆனால், இந்த மூவரும் தவறு செய்ய நீங்களும் நானும் அல்லவோ காரணம்? மனிதனுடைய பேராசையைத் தூண்டிவிடும்படி அரசாங்கமே நடந்தால் பிறகு மக்களிடம் நல்ல குணங்களை எதிர்பார்க்க முடியுமா? ஆகையால், தயவுசெய்து அவர்களை எனக்காக மன்னித்து விடுங்கள்'' என்றார் ஹாத்திகம்.

ஹாத்திமின் பெருந்தன்மையை மெச்சிய அரசர் அவருக்கு மேற்கொண்டு பல ஊர்களை மான்யமாக வழங்கிப் பாராட்டினார்.

வகுப்பறைக்கு வந்த வங்கி


ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா பள்ளிச் சிறுவர்—சிறுமிகளுக்கான புதிய திட்டம் ஒன்றை அமுலாக்கி வருகிறது. இத் திட்டத்தை அண்மையில் இந்த பாங்கியின் கோடம்பாக்கம் கிளையினர் கோடம்பாக்கம் ஃபாத்திமா மெட்ரிகுலேஷன் பள்ளியில் விழா எடுத்து அமுலாக்கினார்கள்.



இத் திட்டத்தின்படி அருகிலுள்ள ஸ்டேட் பாங்க் கிளையினர் பள்ளிக்கூட வகுப்பறைக்கே வந்து மாணவ — மாணவிகளுக்குக் கணக்கு (Account) ஆரம்பித்துக் கொடுப்பார்கள். அடிக்கடி பள்ளியின் வகுப்பறைக்கே வந்து பணத்தை வசூல் செய்து கொண்டும் போவார்கள். பணம் எடுப்பதாக இருந்தால் மட்டுமே கணக்கு வைத்திருப்பவர் பாங்கிற்கு நேரில் போக வேண்டும். மற்றபடி எல்லாமே பள்ளிக்கூடத்தின் வகுப்பறைக்கே வந்து செய்து கொடுக்கப்படும். பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் தந்தையைப் போஷகராக (Guardian) வைத்துக் கணக்கு ஆரம்பித்துக் கொள்ளலாம். ஆக, இத் திட்டத்தின்படி எல்.கே.ஜி. (அரிச்சுவடி) படிக்கும் குழந்தை கூட கணக்கு வைத்துக் கொள்ளலாம் போலிருக்கு. சேமிக்கும் பழக்கமும் முளையிலேயே உடலில் ஊறிப்போகும். கோடம்பாக்கம் விழாவில் ஃபாத்திமாப் பள்ளிச் சிறுமிகள் ஒரு இசை நாடகம் நடத்திக் காண்பித்தார்கள்.

முதல் நாளே இந்தப் பள்ளியில் நூற்றி எட்டுக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. பிள்ளையாருக்கு நூற்றியெட்டுத் தேங்காய் உடைக்க வேண்டிக் கொள்வது போல இது நல்ல சகுனமாக அமைந்தது. — ஈ. வி. ஆர். மோகன்

புத்தாண்டுப் பரிசு




மூளைக்கு வேலை


இரண்டு அட்டைகளை எடுத்துக் கொள்ளுங்கள். படம் Aயையும், Bயையும் வெட்டி எடுத்து, அட்டைகளில் ஒட்டுங்கள். பிறகு படங்களைப் போலவே வட்ட வடிவமாக அட்டைகளை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். படம் Aயில் கருமையான பாகத்தை ஜாக்கிரதையாக வெட்டி எடுங்கள். படம் Bயை சுவற்றில் வைத்து அதன் மேலே படம் Aயையும் வைத்து, நடுவில் ஆணி வைத்து அடித்து விடுங்கள். படம் Aயின் வலது பக்கத்திலுள்ள பிடியை பிடித்துக் கொண்டு, படம் Bயின் இடது பக்க பிடியை மேலும் கீழும் நகர்த்தி, அன்றைய மாதத்தை மேலேயுள்ள திறப்பில் தெரியும்படி சரி செய்யுங்கள். அவ்வளவுதான்! அந்த மாதத்திற்குரிய கிழமைகளும் தேதிகளும் கீழ்த் திறப்பில் தெரியும். இப்போது உங்களுக்குப் புதுமையான காலண்டரும் இப்புத்தாண்டுப் பரிசாகக் கிடைத்து விடும்!

— முதன்

10 பலே பாலுவும் பாட்டில் பூதமும்

கதை: வாண்டு ~ சித்திரம்: செல்லம்




...போகவும். இங்கு ரஸ்தா போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.
நாம்ப ஜாலியா விளையாடலாம் வாங்கடா.
மாதிரியான தாடிக் காரனு இருக்கே, பட்டாக்கத்தியும் பைஜாமாவுமா?
இரு, இரு... அந்தப் போலீஸ் காரரை நான் கவனிக்கிறேன்.
இருக்கானே?
ஏ, அப்பா...
பிடி...பிடி ...அறுக்கப் பிடி...விட்டு டாதே
ஷேர், ஷேர்! உன் கத்தியைப் பயன் படுத்தாதே பணிந்து போவோம்...
பாலுவும் பூதமும் போலீஸ் ஸ்டேஷனில்....
பொடியா, உன்னோட காரியம்தான் இதெல்லாம்; சாலை விதிகளை மீறிய குற்றத்துக்காக அதோ உள்ளது போல ஆயிரம் தடவை எழுதிக் காட்டிவிட்டுத்தான் வீட்டுக்குப் போகணும்.
NOTICE BOARD
இனிமேல் வீதியில் விளையாட மாட்டேன்.
NOTICE BOARD
ஷேர் உன் தொல்லைதான் இத்தனையும்; நீதான் அந்த இம்போசிஷனை எழுதணும்.
கவலை வேண்டாம் பிரபுவே! இதோ உங்களை விநாடியில் விடுதலை செய்து அழைத்துப் போகிறேன்.
பாலு புதுக் கோகுலத்தில் மூழ்கினான். ஸ்டேஷன் காவல் ஆவான் கண்ணயர்ந்தான். பூதம் அதற்குத் தெரிந்த ஒரு மொழியில் எங்கும் எதையும் எழுதித் தள்ளிவிட்டது!
பிரபுவே, ஆயிரம் மல்ல பத்தாயிரம் தடவைகள் எழுதியாயிற்று. இனி, நாம் போக லாம் வாருங்கள்.
ஐயோ! தரை சுவர் எங்கும் ஒரே கிறுக்கல், நாசம்...
வெளியே

நடை வண்டி

நடநட வண்டி, நடைவண்டி !
  நானே ஓட்டும் நடைவண்டி
கடகட வென்றே உருண்டோடும்
  கச்சித மான சிறுவண்டி !

சக்கரம் இரண்டு பின்னாலே
  தனியே ஒன்று முன்னாலே
மூக்கோ ணத்து நடைவண்டி
  மூன்று சக்கர நடைவண்டி

காளை குதிரை இதற்கில்லை
  'கார்புர்' என்ஜினும் இதற்கில்லை
ஆளைக் கொண்டும் இழுப்பதில்லை
  அற்புதத் 'தள்ளு மாடல்'தான் !

தீயும் கரியும் பிடிக்காது
  டீசல், தண்ணீர் குடிக்காது
வாயும், வயிறும் இல்லை-எந்த
  வம்பு தும்பும் இதற்கில்லை!

உட்கார் வதற்கு 'சீட்'இல்லை
  உதைத்து மிதித்திடப் 'பெடல்'இல்லை
'ஹெட்லைட்' இல்லை - 'பெல்'இல்லை :
  ஹிஹ்ஹி ! விசித்திர நடைவண்டி !


'ஆக்ஸிலி ரேட்டர்' இதற்கில்லை
  அதனால் 'பிரேக்'கும் தேவையில்லை:
இக்கா ரணத்தால் என்வண்டி
  எங்கும் 'பிரேக்டவுன்' ஆவதில்லை


சாலை வழியும் போகாது
  தடுக்கிக் குடையும் சாயாது
மூலை முடுக்கில் நுழையாது
  முற்றத் தினையே வளையவரும் !

இளம்பா லகன்என் வண்டியிலே
  ஏறுவ தில்லை 'எல்'போர்டு !
தளர்நடை பயிலும் எங்கட்கு
  ''டிரைவிங் லைசென்ஸ்'' வேண்டாமே!

அம்மான் வாங்கித் தந்திட்ட
  அற்புத மான நடைவண்டி !
அம்மா வருமுன் 'ஒரு ரவுண்டு'
  அடித்து வருகிறேன், நில்லுங்கள்!

'திருமார்பன்'





அம்மாவின் கோபம்!

அம்மாவுக்குக் கோபம்ரொம்ப
ஆகிப் போச்சுது ! — இப்போ
அடுக்களையில் சட்டிபானை
உடைய லாச்சுது !

'சும்மா! சும்மா கூப்பிடாண்டாம் !
தொல்லை தராண்டாம்!' — என்று
துரத்துகின்றாள் ! விரட்டுகின்றாள் !
தூரத் தள்ளுகிறாள் !

'எம்மா!'என்று கூப்பிட்டாலும்
எரிஞ்சு விழுகிறாள்! — கொதிக்கும்
எண்ணெயிலே அப்பளம்போல்
பொரிஞ்சு விழுகிறாள் !

'அம்மாகோபப் பட்டால்கூட
அழகு தா'னென்று — தம்பி
ஆரம்பிச்சான்! சிரித்துவிட்டோம்!
அம்மாவும் நானும் !

நெல்லை ஆ. கணபதி





என் தோழர்

எனக்கு இனிய நண்பர் ஒருவர்
என்னை விடவே பெரியவர்
இனிக்க இனிக்கப் பாட்டும் கதையும்
எத்தனையோ சொல்லுவார் !

உண்ணும்போது சிரிக்க வைத்து
உவகை ஊட்டும் நண்பராம்
வண்ண வண்ண உடை உடுக்கும்
வகைகள் சொல்லும் நண்பராம்.

தெருவில் நடந்து போகும் போது
தினமும் துணையாய் வருபவர்
அருமையான எனது நண்பர்
அதிச யங்கள் காட்டுவார்.

வேகம் ஓடும் ரயிலில் நூறு
வேடிக் கைகள் காட்டுவார்
காகி தத்தால் கைக்குட்டையால்
காட்டும் வித்தை எத்தனை !

பீச்சில் என்னைக் கூட்டிச் செல்வார்
நீச்சல் ஆடப் பழக்குவார்
ஓய்ச்சல் இன்றி நாடும் போதில்
உதவி என்றும் செய்பவர்.

எனக்கு வாய்த்த நல்ல நண்பர்
யார் உனக்குத் தெரியுமா ?
எனக்கு மிகவும் உற்ற தோழர்
ஒருவரே — **என் தந்தையே !**

தம்பி சீனிவாசன்



பயணம் இறைநெறி பாதைகள் மூவழி

ஒழுக்கம் வாழ்வில் வேண்டுமெனில்-வழி
ஓங்கிட வேண்டும் இறைநெறியே
இழுக்கம் இல்லா வாழ்வுபெற—இவண்
இறைவழி யொன்றே நலமாகும்!

பழிகள் நீங்கிச் சமுதாயம் — நற்
பாதை ஏகிட வேண்டுமெனில்
அழுக்கா றின்றி மும்மதமும் — ஓர்
அணியாய் ஒற்றுமை பெறவேண்டும்

மதங்கள் மூன்றாய் இருந்தாலும்—அவை
வழிகள் பலவாய்ச் சென்றாலும்
பதத்தோ டிவைகள் யாருக்கும்—இப்
பாரினில் உரைப்பவை ஒன்றேயாம்!

''இறைவன் ஒருவன் இருக்கின்றான்-அவன்
ஈடற் றெங்கணும் நிறைந்துள்ளான்!
அறைவோம் அவன்புகழ் தினந்தினமும்-அவன்
அருளைப் பெறுவோம் நலம்வாழ!''



கீதையும் பைபிளும் குர்ரானும்—நம்
கேடறக் காட்டும் வழியிதுவே
பாதைகள் மூன்றாய்ப் பிரிந்தாலும்அவை
பயணம் செய்வது இறைவழியே!

ஒருங்கே மும்மதம் செலல்வேண்டி-அவை
ஒற்றுமை தம்முள் பெறவேண்டி
அருளைப் பொழியும் இறையவனும்—இவ்
ஆண்டில் காட்டும் வழிபாரீர்!

இந்துவின் நன்னாள் ஏகாதசியும்—உயர்
ஏசுவின் பிறந்தநாள் கிறிஸ்துமசும்
முந்துறும் முஸ்லிம் பக்ரீத்நாளும்—இவண்
மூண்டன ஓர்நாள் அந்நாளாம்

இருபத் தைந்து டிசம்பரிலே — நாம்
இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள்
ஒருமன மாய்இறை போற்றிடுவோம் - நம்
ஒற்றுமை தன்னைச் சாற்றுவமே!

காரை கே. எஸ். மதிஒளி

மனிதனால் பறக்க முடியாது!

சென்ற நூற்றாண்டில் மேலைநாட்டு பிஷப் ஒருவர் கிராமத்திற்குப் போய் இருந்தார். அவரை வரவேற்கப் பல அறிஞர்கள் குழுமினார்கள். அங்கு கூடிய பெரிய மனிதர்கள் வருங்காலத்தைப் பற்றிப் பலவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வருங்காலம் மிகப் பெருமையுடையதாக இருக்குமென்று வலிந்து சொன்னார்கள்.

இதனைக் கேட்ட பிஷப் ''வருங்காலம் சிறப்புடையதாக இருக்குமென்றீர்கள். எந்த வகையில் சிறப்புடையதாக இருக்கும்? உதாரணத்துக்கு ஒன்று சொல்லுங்களேன்'' என்று வற்புறுத்தினார்.

''உதாரணமாக மனிதன் பறக்கக் கற்றுக் கொள்ளுவான்'' என்றார் அங்கிருந்த விஞ்ஞானப் பேராசிரியர்.

பிஷப் சிரித்தார். வயிறு குலுங்கச் சிரித்தார். ''பறக்கும் ஆற்றல் தேவ தூதர்களுக்குத்தான் உண்டு. நாம் மனிதர்கள். பூமியில் நடக்க வேண்டியவர்கள். நாம் பறக்க முடியாத மனிதர்கள். மனிதனால் பறக்க முடியும் என்று கூறி தேவ தூதர்களை இழிவு படுத்தாதீர்கள்'' என்று வற்புறுத்திச் சொன்னார் பிஷப்.

இவ்வாறு சொன்ன பிஷப்பின் பெயர் **ரைட்** (*Wright*). இவருக்கு இரு பையன்கள். ஒருவன் பெயர் **ஆர்வில்** (*Orvile*) மற்றவன் பெயர் **வில்பர்** (*Wilbur*).

இந்த இரு பையன்கள்தான் ஆகாய விமானத்தைக்கண்டுபிடித்த மேதைகள்!

— அருந்ததி





சின்னப் பெண்ணே, சிங்காரி!

வி.கே.எம்

வெகு காலத்துக்கு முன்னாலே ஒரு குடியானவனும் அவன் மனைவியும் ஒரு மலையடிவாரத்தில் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு பெண்ணும் ஒரு சின்னப் பாப்பாப் பையனும் இருந்தார்கள். மலைச் சரிவில் உள்ள சிறு நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்து அதில் விளையும் தானியங்களையும் காய் கனிகளையும் அடுத்துள்ள நகரத்தில் கொண்டுபோய் விற்று வாழ்ந்து வந்தான் குடியானவன்.

ஒருநாள் குடியானவனும் அவன் மனைவியும் சந்தைக்குக் கிளம்பினார்கள், பொருள்களை விற்றுவர. தாயார் தன் மகளை அழைத்து, "சின்னப் பொண்ணே, சிங்காரியே! சின்னப்பாப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நாங்கள் திரும்பி வரும்போது உனக்குச் சீனி மிட்டாய் வாங்கி வருகிறோம்" என்றாள். சின்னப் பொண்ணும் சம்மதித்தாள். அவர்கள் இருவரும் சந்தைக்குப் போனார்கள். சின்னப் 'பெண் தன் தம்பியை வீட்டின் வெளியே உள்ள மரத்தடியில் புல் தரையில் உட்கார வைத்தாள். தன் தோழிகளுடன் விளையாடப் போய்விட்டாள். அம்மா சொன்ன அறிவுரைப்படி நடக்கவில்லை. தம்பியைப் பற்றி மறந்தே போனாள்.

திடீரென்று ஆகாயத்தில் காட்டு வாத்துக்கள் கூட்டமாக வந்தன. அந்தப் பக்கத்தில் அத்தகைய வாத்துக்கள் அதிகம். பார்ப்பதற்கு அன்னப் பறவைகளைப் போல இருந்தாலும்

அவைகள் வாத்துக்கள்தான். வெள்ளை வெளேர் என்ற நீண்ட இறக்கைகளை விரித்தபடி அவை வெகுதூரம் பறந்து செல்லும். அப்படி வந்த வாத்துக் கூட்டத்தில் சில வாத்துக்கள் குபீரென்று கீழே பாய்ந்து சின்னப் பாப்பாப் பையனைத் தூக்கிக் கொண்டு பறந்து போயே போய்விட்டன.

சின்னப் பெண் சிங்காரி விளையாடிக் களைத்துப்போய் வீட்டுக்கு வந்தாள். அப்போதுதான் அவளுக்குத் தம்பியின் நினைவு வந்தது. அவனைக் காணாமல் போகவே அவளுக்குப் பகீர் என்றது. 'ஐயோ அம்மா வந்து கேட்டால் என்ன சொல்லுவேன்?' என்று தவித்துப் போனாள். அங்கும் இங்கும் தேடினாள். எங்கும் காணவில்லை. ஆனால் தம்பி இல்லாமல் தாயாரைச் சந்திக்க அவளுக்குத் தைரியமில்லை. ஆகவே தேடிக் கொண்டே போனாள். தம்பியின் பெயரைக் கூறிக் கூப்பிட்டுக் கொண்டே நடந்தாள். பெரியவர்கள் பேச்சை லட்சியம் செய்யாமல் நடந்துகொண்டதற்கு வருந்திக் கண்ணீர் விட்டுக் கொண்டே ரொம்ப ரொம்ப தூரம் போய்விட்டாள்.

தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. களைத்துச் சோர்ந்துபோன சிங்காரி அதை நோக்கி நடந்தாள். குடிசையினுள்ளே ஒரு தொண்டு கிழவி உட்கார்ந்திருந்தாள். என்ன ஆச்சரியம்! அவளுக்கு அருகே அவளுடைய தம்பிப் பயல் வண்ண வண்ணக் கற்களை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான். சிங்காரிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. களைப்பெல்லாம் பறந்து விட்டது. கண்ணீரெல்லாம் உலர்ந்து விட்டது. களிப்போடு ''பாட்டி, பாட்டி, என் தம்பி இங்கே உங்களிடம் எப்படி வந்தான்?'' என்று கேட்டாள்.

அடுப்பில் எதையோ காய்ச்சிக் கொண்டிருந்த கிழவி, 'கக்-கக்-கக்' என்று சிரித்தாள். ''இவனுடைய அக்காவா நீ? அழகாக இருக்கிறாயே. இவனைக் காட்டு வாத்துக்கள் தூக்கி வந்து இங்கு போட்டுப் போயின'' என்றாள் கிழவி. அவள் ஒரு சூனியக்காரி. குழந்தையைத் தூக்கி வந்தது அவளுடைய வாத்துக்கள்தான். ஆனால் இது சிங்காரிக்குத் தெரியாது. ''பாட்டி, பாட்டி! இருட்டி விட்டது. நான் தம்பியோடு வீட்டுக்குப் போக வேண்டும். எனக்கு விடை கொடு'' என்றாள்.

பாட்டி மறுபடி சிரித்தாள். ''அழகுப் பொண்ணே! இந்த வேளையில் தனியாகத் தம்பிப் பாப்பாவுடன் போகலாமா? தவிர நீ ரொம்பக் களைத்திருக்கிறாய். இரவு இங்கு தங்கி இளைப்பாறிவிட்டுக் காலையில் போகலாம்'' என்றாள். சிங்காரியும் அவள் அன்புக்குக் கட்டுப்பட்டாள்.

''இதோ இந்த அடுப்பைக் கவனித்துக்கொள். நான் உங்களுக்கு உணவும் படுக்கையும் தயார்செய்து விட்டு வருகிறேன்'' என்று அடுத்த அறைக்குப் போனாள். சிங்காரி அடுப்பிலிருந்த பாத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்ததைக் கிளறிக் கொண்டிருந்தாள்.

''அக்கா, அக்கா! எனக்குப் பசிக்குது'' என்றான் தம்பி அவள் காலைக் கட்டிக்கொண்டு. அப்போது குடுகுடு வென்று ஒரு சுண்டெலி ஓடிவந்தது. தன் முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு, பின்னங் கால்களில் உட்கார்ந்தபடி சிங்காரியைப் பார்த்துப் பேசிற்று. ''சின்னப் பொண்ணே, சின்னப் பொண்ணே! அடுப்பில் கொதித்து கொண்டிருக்கும் மருந்தில் எனக்குக் கொஞ்சம் கொடு. உனக்கு ஒரு சங்கதி சொல்கிறேன்'' என்றது, தன்னுடைய கீச்சுக் குரலில் மெதுவாக. சிங்காரிக்குச் சுண்டெலி பேசியது வியப்பாக இருந்தது. கொதித்துக் கொண்டிருந்ததிலிருந்து கொஞ்சம் எடுத்து ஒரு தட்டில் போட்டு அதன் முன்னால் வைத்தாள்.

சுண்டெலி சொல்லிற்று, ''சின்னப் பொண்ணே, அழகுப் பொண்ணே! இங்கே அரை நாழியும் தங்காதே. உன் அன்புத் தம்பிப் பாப்பாவுடன் இப்போதே இங்கிருந்து ஓடிவிடு. அந்தக் கிழவி ஒரு மந்திரக்காரி. உங்கள் இருவரையும் கொல்லுவதற்காக அடுத்த அறையில் அவள் அரிவாளைத் தீட்டிக் கொண்டிருக்கிறாள்'' என்றது. சிங்காரிக்குப் பகீர் என்றது. தம்பியை இழுத்துத் தன் உடம்போடு இறுக்கி அணைத்துக் கொண்டாள். பயத்தில் அவளால் பேசவே முடியவில்லை. சுண்டெலிதான் மறுபடி பேசிற்று.

'சீக்கிரம் ஓடி விடு, உன் தம்பியுடன்' என்று துரிதப்படுத்தியது. சிங்காரி; தம்பியுடன் ஒரே ஓட்டமாக வெளியில் ஓடினாள். வெளியில் ஒரே இருட்டு.. ஆனால் அவள் உள்ளத்தின் பயமோ அவளை விரட்டிக் கொண்டிருந்தது. கண் மண் தெரியாமல் தம்பியைத் தூக்கிக் கொண்டு ஓடினாள், ஓடினாள், ஓடிக் கொண்டே இருந்தாள்.

அடுத்த அறையிலிருந்து கிழவி குரல் கொடுத்தாள், சற்றைக்கொருதரம். ''சின்னப் பொண்ணே, சிங்காரியே, அடுப்பில் உள்ளதை விடாமல் கிளறிக் கொண்டிருக்கிறாயா?'' என்று.

''கிளறிக் கொண்டிருக்கிறேன், பாட்டி!'' என்று பதில் வந்தது. பதில் கூறியது சிங்காரியல்ல. சுண்டெலி!

அடுத்த அறையில் எல்லாம் தயார்ப் படுத்திவிட்டு வந்தாள் கிழவி. ஆனால் அங்கு யாரையும் காணாது திகைத்தாள். குதித்தாள் கோபத்தில்! ''தப்பி விட்டாளே தம்பியுடன்!'' என்று பட படத்தாள். ''விடமாட்டேன் அவர்களை. எப்படியும் பிடித்து விடுவேன்'' என்றீ வீராப்புடன் சபதமிட்டாள்.

சிங்காரி தம்பியைத் தூக்கிக்கொண்டு இரவெல்லாம் ஓடினாள். பொழுது விடிந்த பிறகும் அவள் ஓய்வு கொள்ள வில்லை. சூரியன் மெள்ள மெள்ள வானத்திலே ஏறிக் கொண்டிருந்தான்.

இப்போது தம்பி அக்காவின் கையை பிடித்தபடி நடந்தான். அவளால் அதற்கு மேல் அவனைத் தூக்கிக் கொண்டு ஓட முடியவில்லை. அவ்வளவு வேகமாகவும் ஓட முடியவில்லை.

''அக்கா அக்கா, பசிக்குத்தான் எதுவும் இல்லை. தாகமாக இருக்கிறது. குடிக்கவாவது கொஞ்சம் தண்ணீர் கொடு'' என்றான். சிங்காரிக்கும் தாகம் நாக்கை வரட்டியது. ஆனால் மந்திரக் கிழவியைப் பற்றிச் சுண்டெலி சொல்லியபிறகு அவளால் எதையுமே நம்ப முடியவில்லை. எங்கு எதில் என்ன மந்திரம் இருக்குமோ என்று பயந்து நடுங்கினாள். ''தம்பி தம்பி! தாகத்தைத் தாங்கிக்கொள். விரைவிலேயே நாம் நம் குடிசைக்குப் போய்விடுவோம். அங்கு பயமின்றி எதையும் உண்ணலாம், குடிக்கலாம்'' என்றாள். அக்காவின் வார்த்தைக்கும் அவள் அன்புக்கும் கட்டுப்பட்டுக் கொஞ்ச நேரம் பேசாதிருந்தான். ஆனால் அவனால் தாகத்தைத் தாங்க முடியவில்லை. தவிர, கண்ணுக் கெட்டிய தூரம்வரை நீர்நிலையே காணோம். பாதையோரத்தில் ஒரு சின்னக் குழி. அதில் கொஞ்சம் தண்ணீர் தேங்கி யிருந்தது. அது ஒரு ஆட்டின் குளம்பு செய்த குழி. அதில்தான் தண்ணீர் தேங்கி யிருந்தது. முன்னால் அக்காவைப் போக விட்ட தம்பி சட்டென்று குனிந்து அந்தத் தண்ணீரை உறுஞ்சிக் குடித்தான். அத்தனை தாகம் பாவம், அவனுக்கு. அடுத்த விநாடி அவன் ஒரு ஆட்டுக் குட்டியாக மாறிப் போனான்!

தன் விரலைப் பிடித்து வந்த கை நழுவியதைக் கண்ட சிங்காரி திரும்பினாள். அங்கே தம்பியைக் காணவில்லை. ஓர் அழகிய ஆட்டுக்குட்டி நின்றுகொண்டிருந்தது. அவளுக்குத் திக்கென்றது. ''ஐயோ! இதென்ன?'' என்றாள் பதறிப்போய். ஆட்டுக் குட்டி பேசியது ''அக்கா, அக்கா! நான்தான் உன் தம்பி. நீ நம் அம்மாவின் பேச்சைக் கேட்காததினால் இத்தனை கஷ்டப் படுகிறாய். நான் உன் வார்த்தையைக் கேட்காததினால் ஆட்டுக் குட்டியாகிப் போனேன். இந்தக் காடு அந்த மந்திரக் காரியின் ஆளுகைக்கு உட்பட்டது என்





பதை ஆட்டுக் குட்டியான பிறகுதான் புரிந்து கொண்டேன்'' என்றான். பாவம், சிங்காரி ஆட்டுக் குட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு 'கோ' வென்று அழுதாள்.

ஆட்டுக்குட்டி துள்ளித் துள்ளி ஓடி வர அவள் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தாள். இனி நடக்க முடியாது என்ற நிலையில் பாதையோரத்தில் ஒரு பாறை மீது அமர்ந்து விக்கி விக்கி அழலானாள். அப்போது அவ்வழியாக ஒரு தேர் வந்தது. அதில் ஓர் அரசன் அமர்ந்திருந்தான். அவன் அடுத்த நாட்டு இளவரசன். முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு ஒரு பெண் அழுது கொண்டிருப்பதையும் அருகே அழகான ஓர் ஆட்டுக்குட்டி அவள் முகம் பார்த்தபடி பரிதாபமாக நிற்பதையும் கண்டு தன் தேரை நிறுத்தினான். அவனிடம் வந்து அன்புடன் அவள் வேதனையின் காரணம் கேட்டான். சின்னப் பொண்ணு சிங்காரி தன் சோகக் கதையை யெல்லாம் அவனிடம் கூறினாள்.

''இதற்காக அழுவானேன்? அழகுப் பெண்ணே நீ என் அரண்மனைக்கு வா. உன்னை அரசியாக்குகிறேன். உன் அருமைத் தம்பி ஆட்டுக்குட்டியும் நம்முடனேயே உண்ணட்டும், உறங்கட்டும்'' என்று கூறி அவளைத் தன் தேரில் ஏற்றிக்கொண்டு அரண்மனைக்குப் போனான். அங்கே சிங்காரியைத் தன் மனைவியாக்கிக்கொண்டான். சிங்காரியும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள். ஆட்டுக்குட்டியும் அரண்மனைத் தோட்டம் முழுதும் குதித்து விளையாடிக் குஷியாகப் பொழுது போக்கிற்று.

ஒரு நாள் இளவரசன் வேட்டையாடச் சென்றான் வேற்று நாட்டுக் காட்டுக்கு. அரண்மனை உப்பரிகையில் உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தாள் சிங்காரி. அப்போது ஒரு பெண் அங்கு வந்தாள். அவள் கையைக் காட்டும்படி சொன்னாள். ரேகையைப் பார்த்து ஆருடம் கூறினாள். அவள் வாழ்க்கையில் நடந்ததை யெல்லாம் அப்படியே தப்பாமல் கூறினாள், அந்தக் குறி சொல்பவள். சிங்காரிக்கு அவளை ரொம்பப் பிடித்துப் போயிற்று. இனிமேல் தன் வாழ்க்கையில் நடக்கப் போவதைப் பற்றிக் கேட்டாள். ''அதை இங்கே சொல்ல முடியாது. என்னோடு தனியாக வந்தால் சொல்லுகிறேன்'' என்றாள்.

சிங்காரியும் வருங்காலத்தை அறிந்து கொள்ளும் ஆவலில் குறி சொல்லுபவளுடன் அரண்மனையிலிருந்து யாருக்கும் தெரியாமல், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பினாள். குறி சொல்லும் குறத்தி யாக வந்திருப்பவள் மந்திரக் கிழவி என்று பாவம் சிங்காரிக்குத் தெரியுமா? அக்காவின் பின்னாலேயே ஆட்டுக் குட்டித் தம்பியும் சென்றது.

ஊருக்கு வெளியே ஒரு குன்றின் மீது ஏறினாள் குறத்தி. கீழே ஒரு காட்டாறு ஓடிக் கொண்டிருந்தது. சட்டென்று குறத்தி தன் சொரூபத்தைக் காட்டி

னாள். சிங்காரி மீது பாய்ந்தாள். அவளைக் கீழே தள்ளிக் கட்டினாள். கத்த கத்த அவள் உடலோடு ஒரு பாறையையும் சேர்த்துக் கட்டிக் கீழே காட்டாற்றில் உருட்டிவிட்டாள். பிறகு மந்திரக் கிழவி சிங்காரியாக உருமாறி அரண்மனைக்குத் திரும்பினாள். அவளை யாரும் சந்தேகிக்கவே இல்லை. வேட்டையிலிருந்து திரும்பிய ராஜகுமாரனும்கூட போலி மனைவியைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் ஆட்டுக் குட்டிக்கு மட்டுமே அத்தனையும் தெரியும். ஆனால் அக்காவுடன் மட்டும்தான் அதற்குப் பேச முடியும். மற்றவர்களுடன் பேச முடியாது. பிறர் பேசுவதைப் புரிந்து கொள்ளும். தனிமையில் இருக்கும் போது தனக்குத் தானேயும் வாய் விட்டுப் பேச முடியும்.

அக்கா மறைந்த பிறகு அது உண்ணவில்லை. உறங்கவில்லை. அரச குமாரன் அதன் நிலை கண்டு வருந்தினான். ''ஏன் இப்படி உன் தம்பி ஏங்கிப் போகிறான்?'' என்று கேட்டான் மனைவியிடம். அப்போதுதான் அவளுக்கு அந்த ஆட்டுக்குட்டி சிங்காரியின் தம்பி என்பது புரிந்தது. அதைக் கண்காணிக்கலானாள். அது சிங்காரியைக் கட்டிக் காட்டாற்றில் வீசிய அந்த பாறைக்குப் போய் நின்று கொண்டு, ''அக்கா, அக்கா! நீ ஆற்றுக்குள்ளிருந்து வர மாட்டாயா? என் வருத்தத்தைப் போக்கமாட்டாயா?'' என்று புலம்புவதை ஒளிந்திருந்து கேட்டாள் கிழவி. 'இது உயிருடன் இருந்தால் நமக்கு ஆபத்து' என்று உணர்ந்து ராஜகுமாரனிடம் நைச்சியமாக அதைக் கொன்று விடும்படி கேட்டுக் கொண்டாள். முதலில் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ''உன் தம்பியையா கொல்லச் சொல்லுகிறாய்?'' என்று பதறிப் போனான். ஆனால் போலிச் சிங்காரியோ ''ஆட்டுக்குட்டி என்னுடைய தம்பி என்றால் என்னை எல்லாரும் ஏளனம் செய்ய மாட்டார்களா? அவன் மறுபடி உருமாற முடியாதபோது இப்படியே வாழ்ந்து உங்களுக்கும் எனக்கும் அவமானத்தை அளிக்கலாமா?'' என்று சமத்காரமாக அவன் மனத்தை மாற்றிச் சாகசமாடினாள். முடிவில் அவனும் அந்த ஆட்டுக் குட்டியைக் கொல்ல ஒப்புக் கொண்டான்.

கொலையாளியைக் கூப்பிட்டு உத்தரவிட்டான். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது அந்த ஆட்டுக் குட்டி. கொலையாளி மறு நாள் காலை அதை முடித்து விடுவதாகக் கூறி இழுத்துப் போய்க் கட்டிப் போட்டான். இரவிலே அது தன் கட்டுக்களைக் கடித்துத் துண்டித்துக் கொண்டு காட்டாற்றின் கரைக்கு ஓடிற்று. அதன் சின்னக் கருப்புக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ''அக்கா, அக்கா, அன்பு அக்கா! ஆற்றுக்குள்ளிருந்து வரமாட்டாயா அக்கா? என்னைக் கொல்லக் கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறான் அரண்மனைக் கொலைகாரன்'' என்று கதறியது தனிமையில்.

ஆற்றிலிருந்து அதன் கதறலுக்குப் பதில் வந்தது. ''சின்னத் தம்பி, என்ன செய்வேன்? கனமான பாறங் கல்லுடன் என்னைக் கட்டிப் போட்டிருக்கிறார்களே. பஞ்சு மணலுக்குள் நான் தஞ்சமடைந்திருக்கிறேனே. எப்படித் தம்பி என்னால் மேலே வர முடியும்?'' சோகமான குரலில் நெஞ்சடைக்கக் கூறினாள் சிங்காரி.

கொலையாளி காலையில் ஆட்டுக்குட்டியைக் காணாமல் திடுக்கிட்டான். ராஜாவின் ஆக்கினையாயிற்றே. ஆட்டுக்குட்டியைத் தேடிக் கொண்டே ஆற்றங் கரைக்கு வந்தான். அங்கே, ஆட்டுக் குட்டி ஆற்று நீரை நோக்கிக் கத்துவதையும் ஆற்றிலிருந்து வரும் பதில் குரலையும் கேட்ட அவன் அதிசயம் அடைந்து ஓடோடிப் போய் அரச குமாரனிடம் ரகசியமாக விஷயத்தைக் கூறினான்.

அரச குமாரன் வீரர்களுடன் ஆற்றங்கரைக்கு விரைந்தான். வலை வீசச் செய்தான். கல்லோடு கட்டுண்டு கிடந்த சிங்காரி மேலே இழுக்கப்பட்டாள். அவள் கட்டுக்களை அகற்றி அரண்மனைக்குக் கொண்டு வந்து வெந்நீரிலே குளிப்பாட்டினார்கள். சிங்காரியின் உடலில் உயிர் வந்தது. கண் விழித்தாள். முன்னங் கால்களைத் தூக்கிக் குதி போட்டது ஆட்டுக்குட்டி. அதை ஆசையோடு தழுவிக் கொண்டாள். அரச குமாரன் அவர்கள் இருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

இதற்குள் போலி சிங்காரியான மந்திரக்காரியைக் கொலைகாரனிடம் ஒப்படைத்திருந்தான் ராஜ குமாரன். கொலைக்களத்தில் அவள் தலை உருண்ட அதே வேளையில் ஆட்டுக்குட்டியின் உருவம் மறைந்து அங்கு சிங்காரியின் சின்னத் தம்பி சிரித்துக் கொண்டு நின்றான்.

எல்லாருடைய ஆனந்தமும் எப்படி இருந்திருக்கும்? இந்தக் கதையைப் படிக்கும் உங்களுக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியைப் போலத்தானே!




ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: விரு
27
கும்பகர்ணனுடைய சூலாயுதத்தைப் பற்றித் தமது முழங்காலில் வைத்து முறிக்கிறார் மாருதி.
ஆஹா! என் அற்புத ஆயுதத்தை அழித்து விட்டாயே. இதோ உன் அரசனை என்ன செய்கிறேன் பார்...
ஆஞ்சநேயா, மன்னர் சுக்ரீவனை அந்த ராட்சதன் தூக்கிப் போய் விட்டானே, நாம் என்ன செய்வது?
சூரிய புத்திரரான சுக்ரீவருக்கு அபாயம் ஏதும் ஏற்படாது. கவலை வேண்டாம்.
நினைவு திரும்பிய சுக்ரீவன் கும்பகர்ணனுடைய காது மூக்கைப் பிய்த்துக் கடித்து நாசமாக்கி விட்டு வான வீதியிலே பறந்து திரும்புகிறான்.
ஆவேசங் கொண்ட கும்பகர்ணன் இரும்புக் கதையுடன் யுத்த பூமிக்கு வர, ராம பாணங்கள் அவனது கைகளையும் கால்களையும், தலையையும் துண்டித்து வதம் செய்தன. அவனது தலை இலங்கையிலும் முண்டம் கடலிலும் போய் விழுந்தன.
மாருதியும், நீலனும் அங்கதனும் பல ராட்சதத் தலைவர்களை யம லோகத்துக்கு அனுப்ப, தோல்வியால் துவண்ட ராவணன் தன் மகன் இந்திரஜித்தை அனுப்புகிறான்.
பிரபோ! இவன் கண்களுக்குத் தெரியாமல் மறைந்திருந்து மாயப்போர் புரிவதில் சமர்த்தன்.


மேகநாதனாகிய
இந்திரஜித்தின்
அஸ்திரங்களால்
உயிரிழந்த வானரங்கள்
ஏராளம். பிரம்மாஸ்
திரத்தினால் ராம லக்ஷ்
மணர்களும்
நினைவிழக்கின்றனர்.
பிரம்மாஸ்திரம் என்னை ஏதும் செய்யாது. ஆயினும் அதற்கு மரியாதை செலுத்த நானும் கட்டுப்பட வேண்டியதுதான்.
கொஞ்ச நேரத்தில் நினைவு தெளிந்த மாருதி விபீஷணனுடன் .....
அதோ முனகல் ஒலி, ஆ! ஜாம்பவான்தான்!
விபீஷணா, ஆஞ்சநேயன் உயிரோடிருக்கிறானா?
ராமலக்ஷ்மணர், சுக்ரீவ அங்கதர்களை விடுத்து அனுமனைப்பற்றி மட்டும் விசாரிப்பானேன்?
மாருதி ஒருவன் உயிரோடிருந்தால் மற்ற அனைவரும் இறந்திருந்தாலும் இருப்பது போலவே ஆகும். அவன் ஒருவன் இறந்தாலோ மற்ற அனைவரும் இருந்தாலும் இறந்தவர் போலத்தான்.
அப்படியா? அதோ அனுமன் உயிரோடிருக்கிறார்.
ஆஞ்சநேயா! இமயமலையில் ரிஷபம் கைலாசம் என்று இரு சிகரங்கள். அவற்றின் நடுவே சஞ்சீவி பர்வதம் உள்ளது. அங்கு இறந்தவர்களைப் பிழைக்க வைக்கும் மிருத சஞ்சீவினி, படுகாயங்களை ஆற்றும் விசல்யகரணி, வெட்டுண்ட பகுதிகளை ஒன்று சேர்க்கும் ஸந்தானகரணி, தழும்பை மாற்றி நேராக்கும் ஸாவர்ண்ய கரணி ஆகிய மூலிகைகள் உள்ளன. இவைகளை நீ உடனே போய்க் கொண்டு வர வேண்டும்.
தொடரும்



கிறிஸ்துமஸ் பரிசு!

- கிருஷ்ணவேணி


1903-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையன்று உலகத்துக்கு ஓர் ஒப்பற்ற பரிசு கிடைத்தது. வானத்திலே மனிதன் பறப்பதற்கு வழி கண்டது அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் மாதத்தில் தான். பண்டிகைக்கு ஒரு வாரம் இருக்கும்போது தான் அந்த மகத்தான சாதனையை **வில்பர் ரைட். ஆர்வில் ரைட்** என்ற இரு சகோதரர்கள் நிகழ்த்தினார்கள். இந்த வெற்றிக்குப் பின்னால் எத்தகைய கடினமான உழைப்புத் தெரியுமா? இந்த முதல் ஏரோப்ளேனைப் பறக்க விடுவதற்கான ஆராய்ச்சியில் நான்கு கிறிஸ்துமஸ் பண்டிகைகள் பறந்தோடிப் போயின. அன்று அவர்கள் கண்ட அந்த வெற்றி திடீர் வெற்றியல்ல. பல ஆண்டுகள் கடின உழைப்பு, சிந்தனை, ஆராய்ச்சிக்குப் பிறகுதான் அந்த வெற்றியை அவர்களால் அடைய முடிந்தது.

அமெரிக்காவில் உள்ள இந்தியானாவில் மெல்வில்லி என்னும் இடத்துக்கு அருகில் 1867ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ந் தேதி பிறந்தார் வில்பர். இளையவரான ஆர்வில் இந்தியானாவில் 1871ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் தேதி பிறந்தார். ஏழைக் குடும்பம். குழந்தைகளை அதிகம் படிக்க வைக்கக்கூட முடியவில்லை பெற்றோர்களால். உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக்கூட ரைட் சகோதரர்கள் முடிக்கவில்லை.

ஒரு சமயம் ஆர்வில் ஒஹியோவில் உள்ள டேய்ட்டன் நகர லைப்ரரிக்குள் நுழைந்தார், பொழுது போக ஏதாவது புத்தகத்தை வாங்கிப் படிக்கலாம் என்று. அவர் எடுத்த புத்தகம் இந்த உலகத்தின் போக்கையே மாற்றி அமைக்கக் காரணமாக இருந்தது. லிலியந்தால் என்ற ஜெர்மானியர் ஒரு பெரிய காற்றாடி மூலம் (கிளைடர்) வானத்திலே மிதந்து பறந்த கதையை விவரித்திருந்தது அந்தப் புத்தகத்திலே. லிலியந்தால் தன்னுடைய கிளைடரில் எந்தவிதமான யந்திரத்தையும் இணைத்துப் பறக்கவில்லை. காற்றின் சக்தியினால் வானவெளியிலே மிதந்து இறங்கினார். இதைப் படித்த ஆர்விலுக்கு அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. அண்ணா வில்பரையும் தூங்க விடவில்லை. இருவரும் லிலியந்தாலின் சாதனையைப் பற்றியே வியந்து வியந்து பேசினார்கள். அன்று எழுந்த அந்த ஆவல் அவர்களை ஆகாய விமானத்தை உருவாக்கி அழியாப் புகழ் பெற வைத்து விட்டது.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக்கூட முடிக்க முடியவில்லை, இந்தச் சகோதரர்களால் என்று கூறினோமல்லவா? ஆனால் கல்லூரிப் பட்டம் பெற்றவர்களுக்கும் மேம்பட்ட அறிவும் ஆற்றலும் திறமையும் அவர்களிடம் இருந்தன. சின்னப் பையன்களாக இருந்தபோது, இறந்து போன மாடு, குதிரை ஆகியவற்றின் எலும்புகளைப் பொறுக்கிச் சேகரித்து உரம் தயாரிக்கும் தொழிற்சாலையில் கொண்டு கொடுத்துக் காசு சம்பாதித்தார்கள். ஓட்டை உடைசல் இரும்புச் சாமான்களைச் சேகரித்துப் பழைய சாமான்கள் விற்கும் வியாபாரியிடம் கொடுத்துச் சம்பாதித்தார்கள். ஓர் அச்சகத்தை நிறுவி ஒரு தினசரிப் பத்திரிகையை நடத்தினார்கள். ஆனால் அதில் நட்டம்தான் ஏற்பட்டது. முடிவாக ஒரு சைக்கிள் கடை வைத்துப் பிழைக்கலானார்கள்.

எந்தத் தொழில் நடத்தி எப்படிச் சம்பாதித்தால் என்ன? அவர்கள்



நினைவும் கனவும் பறப்பதற்கு ஏதாவது ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டும் என்பதிலேயே இருந்தது. ஞாயிற்றுக் கிழமைகளில் எந்த வேலையும் செய்ய மாட்டார்கள். பழைமையில் ஊறிய பண்பாளர்கள். ஓய்வு நாளான அன்று புல்வெளியில் மல்லாந்து படுத்தபடி வானத்திலே வட்டமிடும் பறவைகளையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். இறக்கைகளை இயக்காமல் விண்ணில் மிதந்து செல்லும் கடற் பறவைகளையும் கழுகுகளையும் கண்கொட்டாமல் பார்த்தபடி சிந்திப்பார்கள். இப்படிச் சிந்திப்பதன் பயனாகப் பெரிய பட்டங்களை உருவாக்கி அதைப் பறக்கவிட்டு வானவெளியிலே காற்றில் அது எப்படிப் பறக்கிறது என்பதைப் பலவிதமாகப் பரிசோதித்துப் பார்த்தார்கள். பூமியிலிருந்தபடி இரு கயிறுகளைக் கொண்டு அதை முன்னும் பின்னும் மேலும் கீழும் தங்கள் விருப்பப்படியெல்லாம் ஆட்டி வைத்தார்கள். சைக்கிள் கடையை நடத்திக் கொண்டே பட்டத்தைப் பறக்கவிட்டுப் பல பரிசோதனைகளை நடத்தினார்கள். பட்டத்திலிருந்து கிளைடர் (Glider)களை உருவாக்கி விண்ணிலே பறக்கவிடலானார்கள். 1899க்கும் 1902க்கும் இடையே மூன்று வகையான கிளைடர்களை உருவாக்கினார்கள். கடைசியாகத் தயாரித்த கிளைடரில் மட்டும்; ஒரு வருஷத்தில் அதை ஆயிரம் தடவைகள் வானத்திலே மிதக்கவிட்டுப் பார்த்தார்கள்.

வடக்குக் கரோலினாவின் கடற்கரையை ஒட்டி கிட்டி ஹாக் என்று ஒரு கிராமம். அங்கு கில் டெவில் ஹில் என்று ஒரு சின்ன மலை. ரைட் சகோதரர்கள் தங்கள் கிளைடரை மிதக்கவிட்டுப் பார்க்க இந்த இடத்தைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். ஏனென்றால், இங்கு மரங்கள் இல்லாத பரந்த சம வெளி. தவிர எப்போதும் பலமான கடல் காற்று தரையை நோக்கி வீசிக் கொண்டிருக்கும். அந்தப் பிரதேசத்துப் பூமியோ மிருதுவான மணலால் நிறைந்திருந்தது. குன்றின் மேலிருந்து பறந்து வரும் கிளைடர் இந்த மணல் பரப்பில் இறங்கும்போது அதற்கு அதிக சேதம் ஏற்படாது.

இப்படிப் பல தடவைகள் கிளைடர்களைப் பறக்கவிட்டுத் திருப்தி கண்ட ரைட் சகோதரர்கள் 1903ம் ஆண்டில் ஒரு கிளைடரில் தாங்களே தயாரித்த ஒரு மோட்டார் எஞ்சினை இணைத்துப் பறக்கும் ஏரோப்ளேன் இயந்திரத்தை உருவாக்கினார்கள். இது ஒரு பைபிளேன். அதாவது இரண்டு இறக்கைகளைக் கொண்ட விமானம். மரச்சட்டங்களில் உருவான இவ்விமானத்தின் இறக்கைகள் பட்டுத் துணியால் போர்த்தி மூடப்பட்டிருந்தன. இதற்காக இவர்கள் தயாரித்திருந்த மோட்டார் பன்னிரண்டு குதிரைச் சக்தி கொண்டது. விமானத்தின் புரொப்பல்லர்களை மரத்தினால் தாங்களே செதுக்கி உருவாக்கி இருந்தார்கள். மிக மிக எளிமையானது இவர்கள் உருவாக்கி இருந்த விமானம். அதில் விமானி குப்புறப் படுத்துக் கொண்டு தன் இரு கைகள், கால்களால் இயக்கிப் பறக்கச் செய்ய வேண்டும்.


ரைட் சகோதரர்கள் தாங்கள் தயாரித்த இந்த விமானத்துக்கு 'ஃபிளையர்' என்று பெயரிட்டார்கள். தாங்கள் தயாரிக்கும் சைக்கிள் வண்டிகளுக்குக் கொடுத்திருந்த பெயர் இது. ஃபிளையர் பூர்த்தியானதும் இதை ஒஹியோவிலிருந்து கிட்டி ஹாக்குக்கு ரயில்வண்டியில் அனுப்பினார்கள். இதன் இறக்கைகளின் நீளம் 40 அடிகள். விமா

னத்தின் நீளம் 21 அடிகளுக்கும் மேலே. எடை 600 பவுண்டுகள்.

அது சரி, இப்படிச் சைக்கிள் கடைக் காரச் சகோதரர்கள் பட்டம் செய்து பறக்க விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு ஊரார் என்ன நினைத்தார்கள் தெரியுமா? 'முட்டாள்கள்' பைத்தியங்கள், கிறுக்குகள் — ஆகாயத்திலே பறக்கப் போகிறார்களாம்!' என்று ஏளனமாகப் பேசிக் கேலி செய்து நகைத்தார்கள். ஆனால் ரைட் சகோதரர்களோ எதையும் கண்டு மனம் தளரவில்லை.

1903ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சகோதரர்கள் கில் டெவில் ஹில்ஸுக்கு வந்தார்கள். இவர்களுடைய இருப்பிடம் பாழாகி இருந்தது. எத்தனையோ தடங்கல்கள். தங்கள் யந்திரத்தைப் பழுது பார்த்தல், ஒத்திகைகள் இத்தனையும் பூர்த்தியாகி முடிய டிஸம்பர் பன்னிரண்டு தேதியாகிவிட்டது. அதன் பிறகும் பறப்பதற்கு ஏற்ற பருவ நிலை வாய்க்கவில்லை. டிசம்பர் 14ந் தேதி முதல் வெள்ளோட்டத்துக்கு ஃபிளையர் தயாராக நின்றது. நாணயத்தை மேலே சுண்டிவிட்டார்கள்; ஆர்வில் வில்பர் இருவரில் யார் முதலில் அதை ஓட்டுவது என்று நிர்ணயிக்க. வில்பருக்கு விழுந்தது அதிர்ஷ்டம். ரைட் சகோதரர்களைத் தவிர ஐந்து பேர் உடனிருந்தார்கள். 'ஊ ஊ' என்று ஊதக் காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. வில்பர் விமானத்தில் ஏறி குப்புறப் படுத்துக் கொண்டு அதைக் கிளப்பினார். தோல்வி. விமானம் கிளம்பவில்லை! ஏதோ கோளாறு. மோட்டார் சத்தமிட்டதே தவிர ஃபிளையர் நகரவே இல்லை. ஆனாலும் சகோதரர்கள் இடிந்து போய்விடவில்லை. இத்தனை வருஷங்களில் இப்படி எத்தனையோ தோல்விகளைக் கண்டவர்களாயிற்றே!

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு ஒரு வாரம் முன்பு, டிசம்பர் பதினேழாம் தேதி மறுபடியும் நாள் குறிக்கப்பட்



டது. யந்திரம் இயங்காததற்கான காரணங்களை அறிந்து அதைச் சரி செய்திருந்தார்கள். அந்த ஏழு பேரும் ஃபிளையரை அதன் ஷெட்டிலிருந்து நகர்த்தி வந்து வெளியில் நிறுத்தினார்கள். மறுபடி நாணயம் சுண்டப்பட்டது. இந்தத் தடவை ஆர்வில்லுக்கு அடித்தது யோகம்.

வானம் மூட்டம் போட்டிருந்தது. ஊதல் காற்று உடலை நடுங்க வைத்துக் கொண்டிருந்தது. ரைட் சகோதரர்களைத் தவிர மற்ற ஐந்து பேரும் கைகளைத் தேய்த்துக் கொண்டும் கால்களைத் தரையில் மாற்றி மாற்றி உதைத்து நர்த்தனமாடியும் உடலில் கதகதப்புக்கு வழி செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அத்தனை குளிரிலும் விமானத்தை ஓட்டப் போகும் ஆர்வில் ஒரு சாதாரண ஓவர் கோட்டுக் கூட அணிந்திருக்கவில்லை. ஏன்? அதனால் விமானத்தின் எடை கூடிவிடுமே என்றுதான்!

சரியாக பகல் மத்து மணி முப்பத்தைந்து நிமிஷத்துக்கு ஆர்வில் தன்னுடைய விமானத்தில் போய்க் கீழ் இறக்கையின் நடுவில் உள்ள பகுதியில் வயிறு பதியக் குப்புறப் படுத்துக்கொண்டார். விமானம் கிளம்புவதற்கான விசையை இழுத்தார். அந்த அதிசய யந்திரம் ஆடியது, கனைத்தது, குலுங்கியது, புகையைக் கக்கியபடி மேலே எழுந்தது. இப்படியும் அப்படியும் ஆடியபடி அந்தரத்திலே பன்னிரண்டு **விநாடிகள்**, பன்னிரண்டே **பன்னிரண்டு விநாடிகள்** பறந்து, நூறு அடிகளுக்கு அப்பால் போய் இறங்கியது. சரித்திரப் புகழ்பெற்ற சாதனை நிகழ்ந்துவிட்டது. பல வருடங்களாகப் பட்டபாட்டுக்குப் பலன் கிடைத்துவிட்டது. கடைசியில் மனிதன் தன்னைப் பூமியோடு பிணைத்திருந்த தளைகளை முறித்துக் கொண்டு விண்ணிலே கிளம்பிவிட்டான்!

அதன் பிறகு சகோதரர்கள் அன்றைக்கே மாறி மாறி அந்த யந்திரத்தில்


சிரிக்கச் சிரிக்க



கண்ட்ராக்டர்: வாச்மேன் இந்த இரும்புக் கம்பியெல்லாம் எண்ணிப் பத்திரமா வை. நீ வேலைக்குப் புதிக இல்லையா?

வாச்மேன்: கவலையே வேணுங்க. இதுக்கு முன்னாலே ஆறுமாசம் கம்பி தான் எண்ணிக்கிட்டிருந்தேன்.

-ஆர். பி. சாரதி



சிறுவன்: சார் நமக்கெல்லாம் இருக்கிற மாதிரி எங்க வீட்டு டெலிபோனுக்கும் இரண்டு கால்கள் இருக்கின்றன.

ஆசிரியர்: அதெப்படி?

சிறுவன்: லோக்கல் கால், டிரங்க் கால், சார்!

-சுதாகரன்


என்'னைப் போல நில்லேன் என் ந்துட்டே?

— கொ. வெங்கடசாமி



ஆஸ்பத்திரியில் ஒரு மூட்டைப் பூச்சி: அந்த ஏழாம் நம்பர் படுக்கை ஆசாமி செத்துப் போனத்துக்கு நீ ஏன் இப்படி அழுகிறாய்?

மற்றது: எல்லாம் ரத்தபாசம் தான்.



ஒருவர்: ஐயா நான் தங்களிடம் படிக்கும்போது திட்டுவீர்களே.

ஆசிரியர்: அடடா! அப்படி நான் உன்னை என்னப்பா திட்டினேன்?

ஒருவர்: நீ நடுத்தெருவிலேதான் நிக்கப்போறேன்னு திட்டுவீங்களே சார். நான் இப்போ டிராபிக் கான்ஸ்டபிளா இருக்கிறேன். -ஆர். மீனாட்சி



ரைட் சகோதரர்கள்

அமர்ந்து நான்கு தடவைகள் பறந்தார்கள். நான்காவது தடவை வில்பர் அந்த விமானத்தில் 57 விநாடிகள் பறந்து 852 அடிகளைக் கடந்தார்.

வெற்றி கண்ட சகோதரர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட டேய்ட்டன் நகருக்குத் திரும்பினார்கள். அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பரிசாக உலகம் ஓர் ஒப்பற்ற சாதனத்தைப் பெற்று மகிழ்ந்தது. முதன் முதலில் பன்னிரண்டு விநாடிகள் ஆகாயத்திலே பறந்த ரைட் சகோதரர்கள் அடுத்த ஆண்டே நூறு அடி உயரத்தில் வான வீதியிலே பன்னிரண்டு மைல்களைக் கடந்து சாதனைகளை நிகழ்த்தினார்கள். தங்களுடைய கண்டு பிடிப்பை ஏற்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அரசாங்கத்திடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. மறுபடியும் வாஷிங்டனுக்கு எழுதினார்கள். இந்தத் தடவை மிக அலட்சியமான பதில் வந்தது. ''இரண்டு கிறுக்குகளின் காரியத்தைக் கண்டு முடிவெடுக்க யாரையும் ஓஹியோவுக்கு — அனுப்புவதற்கில்லை!''

1908ல் ஆர்வில் வானத்திலே 57 நிமிஷங்கள் பறந்து மகத்தான சாதனையை ஏற்படுத்தினார். அடுத்துத் தன்னுடன் ஒரு பிரயாணியையும் அழைத்துப் போனார். அப்போது விமானத்தில் எங்கோ ஏதோ ஒரு விசையில் கோளாறு. விமானம் பூமியில் விழுந்து நொறுங்கியது. பிரயாணி கொல்லப்பட்டார். ஆர்வில் முதுகெலும்பில் பலத்த அடியுடன் உயிர் தப்பினார். ஆனால் அந்த அடியினால் அவர் அனுபவித்த வேதனையை வர்ணிக்க இயலாது. இறக்கும் வரை பிரயாணம் செய்யும் போதெல்லாம் தாங்க முடியாத அவஸ்தையை அனுபவிக்கும்படி ஆயிற்று.

ஆர்வில் ரொம்ப சங்கோச குணமுடையவர். விளம்பரங்களையோ பாராட்டையோ, புகழ்ச்சியையோ விரும்பாதவர். தம் வாழ்க்கை வரலாற்றை எழுத விரும்பவில்லை. தம்மைப் புகைப் படம் எடுப்பதையோ பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுப்பதையோ விரும்பாதவர். அண்ணா வில்பரும் இதே குணமுடையவர் தான். ஒரு தடவை வில்பர் கூறினார். ''பறவை இனத்தில் பேசக்கூடியது கிளிதான். ஆனால் அவைகளால் அதிக உயரம் பறக்க முடியாது!''


ரைட் சகோதரர்கள் இருவருமே மிகவும் எளிமையானவர்கள். ஒரு நாள் வில்பர் தம் கோட்டுப் பையிலிருந்து கைக்குட்டையை எடுக்கும் போது ஒரு பளபளக்கும் சிவப்பு ரிப்பன் வெளியே விழுந்தது. அதைக் கண்ட அவருடைய சகோதரி 'இது என்ன?' என்று கேட்டார்.

'' ஓ! அதுவா? நான் சொல்ல மறந்து போனேன். பிரெஞ்சு அரசாங்கம் என்னைக் கௌரவித்து இன்று எனக்குப் பட்டம் வழங்கினார்கள். அப்போது அணிவிக்கப்பட்ட ரிப்பன் இது....'' என்று சர்வ சாதாரணமாகக் கூறினார் வில்பர்


பழமையில் பற்றுதல் கொண்டவர்கள் ரைட் சகோதரர்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் விமானத்தில் பறக்க மாட்டார்கள். ஒரு தடவை ஸ்பெயின் தேசத்து மன்னர் தன்னை விமானத்தில் அழைத்துப் போகுமாறு கேட்டார். அன்று ஞாயிற்றுக்கிழமை. மன்னர் என்பதினால் தங்களுடைய முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. மன்னரின் வேண்டுகோளை மறுத்துவிட்டார்கள்.

மனித குலத்துக்கு மகத்தான வெகுமதியை வழங்கிய ரைட் சகோதரர்கள் திருமணம் செய்து கொள்ளவே இல்லை. ஒரு தடவை இவர்களுடைய தகப்பனார் சொன்னார், ''பறக்கும் யந்திரத்தையும் மனைவியையும் ஒரே சமயத்தில் இவர்களால் நிர்வகிக்க முடியாது'' என்று. ஆகவே அவர்கள் பறக்கும் யந்திரத்தோடு மட்டுமே தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள்.


வில்பர் ரைட் — 1912ம் ஆண்டு மே மாதம் 30ந் தேதியும் ஆர்வில் 1948ம் ஆண்டு ஜனவரி 30ந் தேதியும் டேய்ட்டனில் இம்மண்ணுலகைவிட்டு — விமானம் ஏறாமலே விண்ணுலகை அடைந்தார்கள்.



நம்ம ஆசிர்வாதம் வேணும்னு...



...நன்னு
உடம்பை
வளைச்சு.



...விழுந்து கும்பிடணும்!
தெரிஞ்சுதா ?



"முன்னங் காலைத்
தூக்கிக்கிட்டு நின்னு
பாக்கறேன்."



"பக்கவாட்டில்
காலை மாத்திப்
'பரதமாடுவேன்."

புகைப்படம்:
ஜி. விசுவநாதன்



"உன்னைப்போல நானும் இப்படி
நின்னு காட்டுவேன்."

தெரியுமா ?



1535. நேருஜி இறந்த ஆண்டு, மாதம் எது தெரியுமா ?

1536. ஒரு பொருளை துருவ உச்சிகளில் நிறுத்துக் கிடைக்கும் எடையை விட பூமத்திய ரேகையில் நிறுத்தால் கிடைக்கும் எடை குறைவாக இருப்பதேன் ?

1537. புவி ஈர்ப்புத் தத்துவத்தைக் கண்டறிந்தவர் யார் தெரியுமா ?

1538. பாராமீடரின் உபயோகம் என்ன ?

1539. எலக்ட்ரான்களைக் கண்டு பிடித்தது யார் ?

1540. ரயில் தண்டவாளங்களின் இணைப்புக்களுக்கிடையே கொஞ்சம் இடைவெளி இருக்கிறதே, அது ஏன்?

1541. உலக மிடில் வெயிட் பாக்ஸிங் சாம்பியன் யார் ?

1542. ஹரிதத் என்ற பெயர் எந்த விளையாட்டுடன் பிணைந்துள்ளது தெரியுமா ?

1543. ரஞ்சி டிராஃபி பந்தயங்களில் மிக அதிகமான விக்கெட்டுக்களை எடுத்தவர் யார் என்று தெரியுமா ?

1544. டேவிஸ் கோப்பையை 1971ம் ஆண்டு தட்டிக் கொண்டு போன தேசம் எது ?

1545. ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மராதன் ஓட்டப் பந்தயத்தின் தூரம் எவ்வளவு ?

1546. 'வால்ட் விட்மன் என்பவர் யார் ?

1547. ஜார்ஜ் எலியட் என்ற புகழ் பெற்ற கவிஞரின் நிஜப் பெயர் என்ன தெரியுமா ?

1548. குமார சம்பவம் என்ற புகழ்பெற்ற சம்ஸ்கிருத காவியத்தை இயற்றியவர் யார் ?

1549. தம் மகளுக்கு எழுதிய கடிதங்களிலேயே உலக சரித்திரத்தை எழுதினார் ஒருவர். அது யார் தெரியுமா

1550. ஷெர்லாக்ஹோம்ஸ் என்ற புகழ்பெற்ற துப்பறியும் கதாபாத்திரத்தை ஆங்கில இலக்கியத்தில் உருவாக்கியவர் யார் ?

1551. ரஷ்யாவின் அரசாங்கச் செய்தி ஸ்தாபனத்தின் பெயர் தெரியுமா ?

1552. உலகிலேயே மிகப் பெரிய நிர்வாகச் செயலகம் எது தெரியுமா?

1553. உலகிலேயே மிக உயரமான சிலை எது ?

1554. கலை, இலக்கியம், விஞ்ஞானம், பொது வாழ்வு இவைகளில் மிகச் சிறந்தவர்களாக விளங்குபவர்களுக்குப் பாரத அரசாங்கம் வழங்கும் மிகப் பெரிய விருதின் பெயர் என்ன?

1555. மாக்கியவெல்லி (Machiavelli) என்பது யார் ?

1556. ஜெர்மன்சில்வர் - என்ற உலோகம் உண்மையில் வெள்ளியா?

1557. கால்வனைஸ்டு அயர்ன் என்றால் என்ன ?

1558. வான்கோழிக்கு ஆங்கிலத்தில் 'டர்க்கி' (Turkey) என்று பெயர், அப்படியானால் இப்பறவை துருக்கியிலிருந்து வந்ததா ?

தெரியுமே !



விடைகள்: 1535. மே மாதம் 27ந் தேதி 1964ம் வருஷம். 1536. பூமத்திய ரேகைப் பிரதேசத்தை விடத் துருவ உச்சியில் புவி ஈர்ப்புச் சக்தி அதிகமாக இருப்பதால். 1537. சர் ஐஸக் நியூடன். 1538. வாயு மண்டல அழுத்தத்தை அளக்கப் பயன்படுகிறது. 1539. சர் ஜே.ஜே. தாம்ஸன் என்பவர். 1540. உஷ்ணத்தினால் உலோகம் விரிவடையும். இதை சமாளிக்கவே இந்த இடைவெளி. 1541. அர்ஜென்டினாவைச் சேர்ந்த கரோஸ் மான்ஸன். 1542. கூடைப் பந்தாட்டத்துடன். 1969ல் அர்ஜுனா அவார்ட் வாங்கியவர் இவர். 1543. சென்னையைச் சேர்ந்த வி. வி. குமார் 300 விக்கெட்டுகளுக்கும் அதிகமாக எடுத்திருக்கிறார். 1544. அமெரிக்கா. 1545. 26 மைல்களும் 385 கெஜங்களும். 1546. புகழ்பெற்ற அமெரிக்கக் கவிஞர். 1547. மேரி ஆன் ஈ வான்ஸ் என்ற பெண்மணி. 1548. காளிதாஸர். 1549. ஜவஹர்லால் நேரு. 1550. சர் ஆர்தர் கானன் டாயில். 1551. டாஸ் (Tass). 1552. வாஷிங்டனிலுள்ள பென்டகன். 1943ல் கட்டி முடிக்கப்பட்ட இதன் கட்டிடம் பரப்பு 695000 சதுர அடிகள் 30000 பேர் பணி புரிகிறார்கள். இந்த அலுவலகத்தில் 7748 ஜன்னல்கள் உள்ளன. 1553. ரஷ்யாவின் [illegible] என்றழைக்கப்படும் [illegible] மலைமீதுள்ள தாய்நாடு என்ற சிலை. 270 அடி உயரம். 1554. பாரத ரத்னா. 1555. இத்தாலி நாட்டு தேசியவாதி, சரித்திராசிரியர், அரசியல் சம்பந்தப்பட்ட இரு புகழ்பெற்ற நூல்களை எழுதியவர். 1556. இது வெள்ளியல்ல - இது ஜெர்மனியிலிருந்து வந்ததல்ல. ஜெர்மனியர்களால் கண்டுபிடிக்கப்பட்டதுமல்ல. 1557. துத்தநாகம் பூசிக் கொண்ட இரும்பு. 1558. இல்லை. இப்பறவை வடஅமெரிக்காவிலிருந்து வந்தவை.

சென்னை, தேனாம்பேட்டை ‘கல்கி’ அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக

